விலை 40P

களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் பத்திரிகை 27.11.1992

தமிழீழத் தேசியத் தலைவரின் செய்தியிலிருந்து

இதயக் கோயிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்

எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இறப்புக்கள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்கு சக்தியாக அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள், (தியாகிகள்) காலம் காலமாக எமது இதயக்கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன். தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ளது. சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள். அசாதாரணமான பிறவிகள்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே. பிரபாகரன்
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

மாவீரர் வாரத்தின் இறுதிநாளான தமிழீழத் தேசியநாள்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இன்று 27-11-92 வெள்ளிக்கிழமை 4வது மாவீரர் நாளும் தமிழீழத் தேசிய நாளும் எழுச்சியுடன் அனுட்டிக்கப்படுகிறது.

1992 ம் ஆண்டு 4வது மாவீரர் நாள் கௌரவிப்பானது தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் பெரும் எழுச்சியுடன் நவம்பர் 21 ம் திகதி காலை 9 மணிக்கு தேசியக் கொடி ஏற்றும் வைபவத்துடன் ஆரம்பமானது. தேசியக் கொடி விடுதலைப் புலிகளின் அனுவலகங்கள், முகாம்கள், பயிற்சிப் பாசறைகள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் ஆகிய இடங்களில் 27 அடி உயரக் கம்பத்தில் தகுதி வாய்ந்த முக்கிய பிரமுகர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. வாரம் முழுவதும் தேசியக் கொடி வணக்கம் இடம் பெற்றது. நவம்பர் 22ம் திகதி முதல் தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் சிரமதானப் பணிகள் நடைபெற்றன. அத்துடன் நவம்பர் 21 முதல் 26 வரை ஒவ்வொரு கோட்ட, வட்டப் பகுதியிலும் மாவீரர் தினவார பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள், நாடகங்கள் போன்ற கலை இலக்கிய நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகளின் போது அப்பகுதிகளில் வாழும் மாவீரர்களின் பெற்றோர்கள் அழைத்துவரப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

நவம்பர் 23, 24, 25 ம் திகதிகளில் மண்டபங்கள், வீதிகள் ஆகியவற்றிற்கு மாவீரர்களின் பெயர் சூட்டும் வைபவங்கள் நடைபெற்றன. மாவீரர் தினவார மர நடுகைகளும் ஆங்காங்கே நடைபெற்றன. இவ்வியக்கமாக மக்கள் அனைவரும் பங்கேற்று தேசியக் கடமையை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டியது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மாணவர்களிடையே

பாடசாலைகளில் இவ்வாரத்தில் அரைமணி நேரத்திற்கு மாவீரர் நினைவுப் பேச்சுக்களும் கவியரங்கங்களும் இடம்பெற்றன. மாவீரர்களின் பெற்றோர்களை மாணவர்கள் அழைத்து கௌரவம் செய்யும் நிகழ்ச்சி நவம்பர் 26 ம் திகதியன்று நடைபெற்றது. இக் கௌரவிப்பு விழாக்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகள், அரசியல் பொறுப்பாளர்கள் மூத்த உறுப்பினர்கள் கலந்துகொண்டு மாவீரர்களின் பெற்றோர்களைச் சந்தித்து கௌரவித்ததுடன் நடாத்தப்பட்ட இவ்விழாக்களில் மதிய உணவு, பிற

தொடர்ச்சியை மக்கள் ....

மாவீரர் சிறப்பிதழான
இவ்விதழில் .....

- [illegible]
- [illegible]
- [illegible]

மக்கள் போற்றும் மாவீரர் தினம்

ஒவ்வொரு நாடும் தனது இறைமையின் சுதந்திரத்தின் வெளிப்பாடாக ஒரு குறித்த நாளைத் தேசிய தினமாக அனுசரிப்பது வழமை. தமிழீழமும் இவ்வகையில் தனது இறைமையின் வெளிப்பாடாக தமிழீழத் தேசிய நாளாக கார்த்திகை 27ம் திகதியை அனுசரிக்கின்றது. கார்த்திகை 27, தமிழீழ வரலாற்றை பொறுத்தவரை அதிமுக்கியமானதொரு நாள். 27-11-1982 அன்று தான் தமிழீழ விடுதலைக் காய், தமிழீழ விடுதலைப்புலித் தளபதி சங்கர் (சத்தியநாதன்) முதற் களப்பலியானார். இந்த முதல் விதை தமிழீழ மண்ணில் விதைக்கப்பட்ட நாளை, தமிழீழத்திற்காய் தம் இன்னுயிர் ஈந்த மாவீரர்கள் அனைவரதும் குறியீட்டு நாளாக, மாவீரர் தினமாக தமிழீழத் தேசிய தலைவர் பிரபாகரன் அவர்கள் பிரகடனப்படுத்தினார்.

ஒவ்வொரு தேசிய இனமும் தன் மக்களுக்கு வாழ்வளித்தோரின் நினைவாக தேசிய வீர புருடர்கள் தினத்தை (National Heros day) தனது தேசிய நாளென்று கொண்டாடி தேசிய வீரர்களை கௌரவிப்பது வழமை. இவ்வகையில் தமிழீழ மக்களின் நல்வாழ்வுக்காய் தம் இன்னுயிரை ஈந்தளித்த மாவீரர்கள் தினம் தமிழீழத் தேசிய நாளாகவும் குறிக்கப்படுவது அர்த்தமுள்ளதாகிறது. மேலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழீழ மக்களால் நடாத்தப்படும் தேசிய விடுதலைப் போராட்டமாகும். தேச மீட்புக்காக அணிதிரண்ட மக்களின் இராணுவத் தோற்றமே தமிழீழ விடுதலைப் புலிகளாகும். அதனால்தான் மக்கள் போராட்டமாகிய தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை எந்த அடக்கு முறைகளாலும் தடுக்க முடியாதுள்ளது. இந்த மக்கள் விடுதலைப் போராட்டத்தில் உணர்வு பெற்ற மக்கள் ஆர்வத்துடன் இணைந்து தேசக் கடமை செய்யப் புறப்படுகின்றனர். அவர்களது இலட்சியம் உயர்வானது. அழிவற்றது. அழிக்கப்பட முடியாதது. எனவே எதிரியினால் அவர்களது மானிட உடலை மட்டும்தான் அழிக்க முடியும். அதுவும் இலகுவான காரியமல்ல. சிறந்த பயிற்சியும், நிறைந்த தேசப்பற்றும் உள்ள போராளிகள் பெரும் சாதனைகளைச் சாதிப்பதற்கு தம் இன்னுயிரை தற்கொடையாகவும் ஈகங்களாகவும் ஈந்து, தமிழீழ மக்களிடை நிரந்தரமான வாழ்வு பெற்ற மாவீரர்களாக தமிழீழத் தேசத்தில் நிலைபெற்றுவிடுகின்றனர். ஒவ்வொரு தமிழீழ நெஞ்சமும் இம்மாவீரர்களை கண்கண்ட தெய்வங்களாக இதய நன்றியுடன் போற்றுகின்றனர். ஒவ்வொரு மாவீரனாலும் எழுப்பப்படும் உணர்வலையினால் ஓராயிரம் போராளிகள் உணர்வு கொண்டு எழுகின்றனர். இதனால் தமிழீழ தேசிய விடுதலையானது விரைவாக முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

எனவே மாவீரர் நாளும்-தமிழீழத் தேசிய நாளுமான கார்த்திகை 27, தமிழீழ மக்கள் ஒவ்வொருவரினதும் நாட்டு வணக்க நாளாக மாறி நிற்கின்றது. இந்நாள் மிகமிகப் புனிதமானது. எமது வாழ்வுக்காய் தமது உயிரைக்கூட துஞ்சமென மதித்த தூய வீரர்களின் நினைவுநாள். நன்றி எனும் உணர்வுள்ள ஒவ்வொரு தமிழனும் இந்நாளை தன் வாழ்நாளின் மிகப் பரிசுத்தமான தினமாகப் போற்றுவான், என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

மாவீரர் நாள் என்றதும் மாவீரர் நினைவாக பல்வகையான அஞ்சலிகள் செலுத்தப்படுவது வெளி அடையாளம். உண்மையில் அம்மாவீரர்கள் எதற்காகத் தம் வாழ்வை உயிரை அர்ப்பணித்தார்களோ, அதற்காக மானசீகமாக உழைப்பது ஒன்றே எமது மாவீரர்களுக்கு நாம் செய்யக்கூடிய ஒரேயொரு கைம்மாறு எனலாம். நாம் எங்கு வாழ்ந்தாலும், எத்தகைய நிலையில் வாழ்ந்தாலும், அங்கு எமது தகுதிக்கேற்ற வகையில் தமிழீழ விடுதலைக்கு உழைப்பது ஒன்றே மாவீரர்க்கு நாம் செலுத்தும் நிரந்தர அஞ்சலியாகும்.

தமிழீழத் தேசிய நாள் என்று, ஒன்று இன்று உருவாகியுள்ளதென்றால் அது இந்த மாவீரர்களின் உழைப்பின் பரிசே. இன்று தமிழீழத்தில் அரசமைநிலை அரசு (Defacto Government) ஒன்று, எல்லாவித இராணுவ-பொருளாதார முற்றுகைகளையும் எதிர்த்து, திறமையுடன் செயற்படுகிறதென்றால் இந்த மாவீரர்களின் ஆன்மாக்களின் உருவாக்கலே அது.

தமிழீழத்தில் மட்டுமல்ல உலகில் எங்கெங்கெல்லாம் தமிழன் வாழ்கின்றானோ, அங்கெல்லாம் தமிழத் தேசிய உணர்வு வீறுகொண்டெழுவதற்கு இந்த மாவீரர்களின் தன்னலமற்ற தற்கொடைகளும் ஈகங்களுமே வித்தாகத் திகழ்கின்றன. எனவே உலகத் தமிழினத்தின் வணக்கத்திற்குரிய தெய்வங்களாகவும் இம்மாவீரர்கள் மாறி நிற்கின்றனர். அத்துடன் எங்கெல்லாம் விடுதலைப் போராட்டங்கள் உலகில் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் முன்மாதிரிகளாகவும் நம்பிக்கை நட்சத்திரங்களாகவும் தமிழீழ மாவீரர்கள் ஒளிவீசுகின்றனர். எனவே மாவீரர் நாள் மக்களின் நாள்.

ஆகவே, தமிழீழத் தேசிய நாளில் மாவீரர் கனவு நனவாக நாம் அர்ப்பணிப்போடு கூடிய இன உணர்வுள்ள வாழ்வு வாழ்வோம் என்று உறுதி பூணுவோம். ■

கடற்புலிகளை அழிக்கப்புறப்பட்ட கடற்படைத் தளபதி மரணம்

கடற்புலிகளை சிறிது காலத்துள் அழிக்க முடியுமென்ற நம்பிக்கையுடன் செயற்பட்ட சிறீலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ கொழும்பு காலிமுக வீதியில் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டுள்ளார்.

காலிமுக வீதி வழியாக மத்திய வீதியிலுள்ள சிறீலங்கா கடற்படை அலுவலகத்திற்கு காரில் செல்லும்போது வெடிகுண்டுடன் தன்னை இணைத்துக் கொண்ட மோட்டார் சைக்கிள் வாலிபர் ஒருவர் காரின் வலது புறமாக வந்து காருடன் மோதியுள்ளார். உடனே சிறீலங்கா கடற்படைத் தளபதி சென்ற கார் தலைகீழாக கவிழ்ந்து சிதறிக்கிடப்பதையும் சிறீலங்கா கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னான்டோ, அவரின் சாரதி ஏ. எல். பெரேரா, மெய்க்காப்பாளர் கனில் வீரபாகு ஆகியோர் இறந்து கிடப்பதையும், அவரின் பிளாக் (FLAG) லெப்டினன்ட் சந்துன குணசேகரா குற்றுயிராகக் கிடப்பதையும் அவ்விடத்தில் நின்ற மக்கள் கண்டனர். மோட்டார் சைக்கிள் கக் குநூறாகியதுடன் இளைஞரும் சிதறுண்டு காணப்பட்டார். சந்துன குணசேகரா கொழும்பு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு காலமானார். இச்சம்பவத்தால் சிறீலங்கா பாதுகாப்பு படையினர் இடையே பெரும் அச்சமும் மனச்சோர்வும் காணப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தின் பொழுது அருகிலிருந்த கோட்டல் ஒன்றில் தங்கியிருந்த நியூசிலாந்து கிரிக்கட் அணியினருடன் இருந்த நியூசிலாந்து பத்திரிகையாளர், "இது முழக்கம் போன்றும் நிலை நடுக்கம் போன்றும் இருந்தது அனைவரையும் திக்பிரமை பிடிக்க வைக்கும் அளவுக்கு சத்தமும் அதிர்வும் இருந்தது" என நுள்ளார்.

கொழும்பில் அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாத வகையில் தாம் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக சிறீலங்கா பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகள் செய்தி வெளியிட்டு, சில தினங்களுக்குள் நடந்த இச்சம்பவம் சிறீலங்கா பாதுகாப்பு படையின் மீதும், சிறீலங்கா அரசின்மீதும் பலத்த அவநம்பிக்கை தோன்ற வழிசெய்துள்ளது.

சிறீலங்கா பாதுகாப்புப் படையின் மிகப் பாதுகாப்பான இடங்களுக்குள்ளும் தாக்குதல் நடத்தும் வலிமை உள்ளவர்கள் இருப்பதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது என பத்திரிகைகள் விமர்சித்துள்ளன.

சிறீலங்கா ஜனாதிபதி இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் "தூர திருஷ்டி வசமான இல் யுத்தம். இணக்கமான தீர்வு மூலம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்" என்று கூறியுள்ளார்.

இதற்கிடையே கிளான்சி பெர்னான்டோ எப்படியாவது கடற்புலிகளை சிலகாலத்துள் அழிப்பேனென உறுதியுண்டு செறிபட்டார் எனவும் இதற்காக இந்திய இலங்கை கடற்படைகளின் கட்டுரோந்துக்கான பேச்சுவார்த்தைகளை கட்டுத்திய அதிகாரிகளுடன் நடத்தியுள்ளார் எனவும் இதற்காக அடிக்கடி இந்திய அதிகாரிகளை கடல்கிற அழைத்துச் சென்று காண்பித்து வந்தார் எனவும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. ■

இரண்டாம் கட்ட ஈழப்போரில் 18,000 படையினரை சிறீலங்கா இழந்துள்ளது

இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கி 29 மாதங்கள் சென்றுள்ள நிலையில் 18,000 படையினரை சிறீலங்கா அரசு இழந்துள்ளதென புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இது சிறீலங்கா படைப்பலத்தில் ஐந்தில் ஒரு பகுதி அளவு 20% ஆகுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறீலங்கா அரசு வெளியிட்டுள்ள மிகக் குறைவான மதிப்பீடுகளைக் கொண்ட புள்ளி விபரத்தின்படி மூவாயிரம் படையினர் இறந்தும் 2200 படையினர் படுகாயமுற்றும் 7,000 பேர் விலகி ஓடியும் உள்ளனர். அத்துடன் இந்த இரண்டாம் கட்ட போரில் கடந்த ஐந்து மாதத்தில் எட்டு அதி உயர் அதிகாரிகளை சிறீலங்கா பாதுகாப்புப் படையினர் இழந்துள்ளனர். வடபகுதிக்கான முன்னாள் இராணுவத் தளபதி லெப் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ, வாழ் குடாநாட்டுக்கான முன்னாள் இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விஜயரட்ண, வடபகுதிக்கான கடற்படைத் தளபதி கொமடோர் மொகான் ஜயகொடி, லெஃபரன் வீரர் டி. எல். கனில், வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ மற்றும் மூன்று முன்னாள் இராணுவ மேர்ஜர்கள் ஆகிய எட்டு பேரையும் சிறீலங்கா இராணுவம் இழந்துள்ளதாகக் கொழும்பு பத்திரிகைகள் பட்டியல் இட்டுள்ளன.

இவர்களை விட பாதுகாப்பு படைக் கமாண்டர் மேஜர் ஜெனரல் லக்கி விஜயவர்த்தன உட்பட பல உயர் பாதுகாப்பு படை அதிகாரிகளையும் சிறீலங்கா இராணுவம் இழந்துள்ள தாகவும் அப்பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. 220 இளநிலை அதிகாரிகள் படுகாயமடைந்துள்ளதாகவும் கட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ் இழப்புக்களினால் சிறீலங்கா இராணுவத்தில் 10,000 வெற்றிடங்கள் கட்டடியாக நிரம்பாமல் வேண்டியுள்ளதால் சிறீலங்கா அரசு இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதில் பெரும் அக்கறை காட்டுகிறது மூன்று நாட்களில் குருநாகல், அனுராதபுரம், கண்டி, காலி, மாத்தறை, மின்னேரியா, திருக்கோணமலை, பலாலி, கொழும்பு, அம்பாறை, குருவிட்டா ஆகிய பத்து இடங்களில் இராணுவத்திற்கு ஆட்கள் திரட்டப்படுமென சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது. நகர்மற்று சிங்கள இளைஞர்களிடையே இராணுவத்தில் சேரும் ஆர்வம் குறைந்துவிட்டமையால் இதற்கு முன்னர் கொழும்பில் நடாத்திய இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் போதிய ஆட்கள் வரமையால் கைவிடப்பட்டன. தற்பொழுது இராணுவத்தில் சேர்வதற்கான கல்வித் தகைமையை எட்டாம் வகுப்பாக தளர்த்தி கிராமப்புற சிங்கள இளைஞர்களின் கவனத்தை ஈர்க்க சிறீலங்கா அரசு முன்னாள் வருகிறது. ■

பலாலி முகாமின் வளலாய் காவலரண்கள் 150 அழிப்பு

பலாலி சிறீலங்கா இராணுவ முகாமின் வளலாய்ப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினர் அமைத்திருந்த 150 காவலரண்களை தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தனர்.

ஆறுமணி நேரமாக நடைபெற்ற கடுஞ்சண்டையில் இவ் 150 காவலரண்களும் தமிழீழ விடுதலைப் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டது. இத்தாக்குதலில் 19, 53 LMG -01, DPMG -01, AKLMG 10, புலியாக மோட்டார் -01, 03 -02, AK47 -15, பங்கர் -01 மற்றும் ஒரு இடைத்தரிப்பு மேற்பட்ட கைகளும், இரண்டு இராணுவ காவலரண்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளின் பலமான தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாது 50க்கும் மேற்பட்ட சிறீலங்கா இராணுவத்தினர் உயிரிழந்ததுடன் பலர் படுகாயமடைந்தும் உள்ளனர். விமானப் படை விமானங்கள், உலங்கு வானூர்திகள், டாங்கிகள், சிறீலங்கா மோட்டார்கள் என பலதரப்பட்டவற்றை சிறீலங்கா இராணுவம் எதிர்த் தாக்குதல் நடத்தியபோதும் ஆறு மணிநேரத்தில் பின்வாங்கினர்.

இத் தேச மீட்பு போரில் 70 பெண் போராளிகளும் 28 ஆண் போராளிகளும் மாவீரர்களாகி தமிழீழ விடுதலையின் விதைகளாக தங்களை மாற்றிக் கொண்டனர். ■

வவுனியா காவலரண் மீது அருள் 89 தாக்குதல்

வவுனியா கணேசபுரம் இராணுவ காவலரண்மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் பலியானார். காலை 7.30 மணியளவில் இத்தாக்குதல் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இப்பகுதி காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் அருள் 89 தாக்குதலை நடாத்திய போது ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார்.

தமிழ் இணையக் குடியகம் Tamileelam Archive

தமிழினத்தின் ஒளி விளக்கு

உலகத் தமிழினத்தின் ஒளி விளக்கு - எங்கள்
ஊரில் உலவுகின்ற விடி விளக்கு
முழவு எடுத்தடித்து நீ முழக்கு - தம்பி
முத்த தமிழ்க் குடியின் அகல் விளக்கு (உலகத் ...)

துங்கிக் கிடந்ததைபா தமிழீழம் - இவன்
சொல்லிக் கொடுத்த இசை பூபாளம்
வேங்கை என எழுந்து தான் நடந்தான் - புலி
வீரர்தனைத் திரட்டிப் போர் தொடுத்தான்
(உலகத்...)

கஞ்சைக் கழுத்தணிந்த நாயகனே - இனி
நாளும் உனக்கு வெற்றி போமகனே
குஞ்சும் எதிரிகளைக் கொத்தி விரட்டும் - உந்தன்
கூட்டில் வளர்ந்த குஞ்சு வெற்றி எடுக்கும்
(உலகத்...)

சிங்களத்துப் பாசறைகள் கண்டு கொதித்தான் -இவன்
திட்டமிட்டு அத்தனையும் தட்டி மிதித்தான்
தாயகத் தமிழ் இனத்தின் தலைவன் இவன் - பல
தகுதி ஒருங்கிணைந்த கலைஞன் இவன்
(உலகத்...)

தாயைத் தாய் நிலத்தை நேசித்தான் - எங்கள்
தலைவன் கதாநிரப் பண் வாசித்தான்
பாயும் புலித்தலைவன் போரைத் தொடுத்தான் -பிர
பாகரன் என்றழைக்கும் பேரை எடுத்தான்
(உலகத்...)

(தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களது 38 வது பிறந்த தினம் 26-11-92 அன்று ஆகும். அவரை உலகத்தமிழினம் முழுவதும் நெஞ்சார வாழ்த்தி நிற்கின்றது.)

சொந்த மண்ணில் வாழ்வது பெருமைக்குரிய விடயம்

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பிய பெண் தகவல்

முன்னர் தாக்கி அனுப்பி வைத்தார்கள். இப்போது அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பின் தீவிர அவதானிப்பின் பின்னர் எம்மை வேறு விதங்களில் நிர்ப்பந்தம் செய்து அரசாங் அதிகாரிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

இவ்வாறு தமிழக அகதி முகாம் ஒன்றிலிருந்து சமீபத்தில் வந்து சேர்ந்த ஞானப்பிரகாசம் மேரி யோசெப் என்ற (வயது 46) பெண்மணி தெரிவித்தார்.

கோயமுத்தூர் மாவட்டத்தில் திருமூர்த்தி நகரில் உள்ள அகதி முகாமில் தங்கியிருந்துவிட்டு இரண்டு வருடங்களின் பின்னர் கப்பல் மூலம் திருக்கோணமலை வந்து சேர்ந்த இந்தப் பெண்மணி, தனது சொந்த இடமான கிளிநொச்சி செல்வதற்காக வவுனியா வந்து சேர்ந்தபோது அகதி முகாமில் தனக்கேற்பட்ட கொடுமைகளை விபரித்தார்.

அகதிகளுக்கான ஐ.நா. அமைப்பினர் தீவிர கவனம் எடுப்பதற்கு முன்னர், எமது முகாமுக்கு வந்த கலெக்டரும் மற்றைய அதிகாரிகளும் எம்மைத் தாக்கி பஸ்ஸில் ஏற்றி வந்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்காக முயற்சித்தார்கள். நான் மறுத்துவிட்டேன். அதனால் கடுமையாக கொடுமைப் படுத்தப்பட்டேன்.

இலங்கையில் சிங்களப் படையினரால் அவதிப்பட வேண்டி வரும் என்ற அச்சத்திலே மறுத்துவிட்டேன். அகதிகளுக்கான ஐ.நா. அமைப்புஎம்மைத் தீவிரமாக அவதானிக்கத் தொடங்கிய பின்னர் எமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் நிறுத்தப்பட்டன. ஆனாலும் எமது பஸ்ஸிற்கு உணவுப் பொருட்களையும் பணத்தையும் தாமதித்து வழங்குவதனாலும் திட்டித் தீர்ப்பதனாலும் புதிதாக நிர்ப்பந்திக்கப் பட்டோம்.

இந்தத் தொல்லை தாங்கமுடியாமலேயே நாம் கலெக்டரிடம் எம்மதித்துப் புறப்பட்டு வந்தோம் என்று அவர் கூறினார்.

எமது சொந்த மண்ணில் வாழ்வது பெருமைக்குரிய விடயம் என்று தெரிவித்த அவர், அகதிமுகாமில் தம்முடன் தங்கியிருந்த மகன் ஞா.ஞானசீலன் கோயம்புத்தூர்பொலிசாரினால் கைது செய்யப்பட்டுச் சென்று மூன்று மாதங்கள் தடுத்துவைக்கப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றும் தனது கணவன் 1986ஆண்டு சிறிலங்கா இராணுவத்தின் செல் தாக்குதலினால் உடல் சிதறி இறந்தார் என்றும் தெரிவித்தார் ■

வவுனியா செயலகத்தின் முயற்சிகள் தோல்வி

செட்டிகுளம் பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் அரச நிலங்களங்களையும் அலுவலகங்களையும் செயல்பட வைப்பதில் வவுனியா செயலகம் எடுத்துவரும் நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வி அடைந்துள்ளன.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் இப் பகுதியில் பணியில் ஈடுபடுவதற்கு பின் நிற்பதே இத் தோல்விக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முற்றிலும் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த இப் பிரதேசத்தில் இராணுவ தாக்குதலுக்கு அஞ்சி மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

தற்போது தமிழ் மக்களின் நிலங்களில் சிங்களக் குடியேற்றம் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த சில மாதங்களுக்கும் மேலும் நூற்றுக்கணக்கான சிங்களக் குடும்பங்கள் இப்பகுதியில் குடியேற்றப்பட்டுள்ளன. இம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தொடர்பாகவே அரச காரியாலயங்களை செயல்பட வைப்பதில் அதிகாரிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

ஆனால் தமிழ் மக்கள் குடியமர்ந்து வாழ்வதின் நிற்கும் பகுதியில் பணிபுரிய தமிழ் ஊழியர்கள் மறுத்துள்ளனர்.

புனர்வாழ்வு நிதியில் மோசடி

அம்பாறை மாவட்டத்தில் புனர்வாழ்வுக்கென ஒதுக்கப்பட்ட பணத்தில் மோசடி செய்யப்பட்டு உள்ளதாக தெரிய வருகின்றது.

15 இலட்சம் ரூபா வரை மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. இது தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் உள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் ஒருவரை அம்பாறை நீதிமன்ற விசாரணை மதியில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

தமிழீழக் காவல்துறை தனது முதலாவது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ளது. படத்தில் தமிழீழக் காவல்துறை இரண்டாவது படைபணி பயிற்சி முடித்து வெளியேறும் காட்சி. பொது நிறுவனங்களைச் சேர்ந்த பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

சங்காரமாகிய "வை 8" ஒரு வரலாற்றுப் பதிவு

ஆப்பரேசன் பலவேகய 11 நடவடிக்கையில் வெற்றிலைக் கேணி-கட்டைக்காடு முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் ஆனையிறவு நோக்கி முன்னேற முயன்றுகொண்டிருந்தனர். முன்னேறும் நடவடிக்கையில் சுடுபட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் 8 வது நாளாக தொடர்ந்து சமர் நடந்துகொண்டிருந்தது.

இயக்கச்சியில் எங்களுடைய வாகனம் பழுதுபட்டு நின்றதால் பார்த்து வர (5. 7. 92 ஞாயிற்றுக் கிழமை) அன்று மாலை 4 மணியளவில் பளையிலிருந்து இயக்கச்சிக்குப் போய்க்கொண்டிருந்தோம். புதுக்காட்டுச் சந்திக்கு அருகில் சென்றுகொண்டிருக்கும்போது இயக்கச்சிப் பகுதியில் உலங்கு வானூர்தி ஒன்று வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டிருந்தது.

மேலே உலங்கு வானூர்தி சுட்டுக்கொண்டிருக்கும் போது தரையிலிருந்து எறிகணைத்தாக்குதலின் வெடியோசைகளும் துப்பாக்கி வேட்டொலிகளும் கேட்டுக்கொண்டிருந்தன. அப்பிரதேசம் அதிர்ந்து கொண்டிருந்தது.

நானும் என்னுடன் கூடவந்த சின்னமணி என்பவரும் தொடர்ந்து சைக்கிளில் போய்க்கொண்டிருந்தோம். சனநடமாட்டம் மிகக் குறைவு. இயக்கச்சி கொம்படி வழிப்பயணிகளின் போக்குவரத்து பலவேகய 2 நடவடிக்கையால் தடைப்பட்டிருந்தது சண்டை (பலவேகய 2 நடவடிக்கை) ஆரம்பமாவதற்கு முதல் 25. 6. 92 அன்றே இயக்கச்சியில் குடியிருப்புகள் மீது குண்டுவீச்சும், எறிகணைத்தாக்குதலும் தொடங்கியதால் மக்கள், (சண்டை வலுப்பெற்று) தாக்குதல் கடுமையாகியதும் மெல்ல மெல்ல வெளியேறி, சண்டை நடக்காத இடங்களுக்குப் போகத் தொடங்கியிருந்தனர். ஆனாலும் இடைஇடையே பொதுமக்கள் இருந்தனர் நாங்கள் செல்லும் போது புதுக்காட்டுச் சந்தியில் இருந்து வீதியின் இரு பக்கமும் உள்ள தென்னந் தோட்டங்களில் விமானங்கள் வீசிய குண்டுகளினால் தென்னைகள் முறிந்து சிதைந்து கிடந்தன. மனதைத் துயர் வருத்தியது. இந்த மரங்களை வளர்க்க எவ்வளவு உழைப்பு உழைத்திருப்பார்கள். பல குண்டுகள் வீசப்பட்டதன் அழிவுகள் தெரிந்தன. திடீரென சின்னமணி முக்கைப் பொத்தினார். எங்கிருந்தோ நாற்றவாடை அடித்தது. குண்டு வீச்சினால் ஊரவர்களின் ஆடோ, மாடோ பலியாகியிருக்கக்கூடும். முறிந்த தென்னைகளினதும் வெடி மருந்தினதும் ஒரு வகை நெடி அடித்தது. சிங்கள இராணுவத்துக்குத் தமிழரின் மத்தகளென்றாலென்ன, மரங்களென்றாலென்ன? எல்லாம் விரோதம் தானே. தமிழர்களே எதிரிகளாக, அவர்களுக்குத் தெரியும் வரை தமிழருடையவை அந்தப் பார்வையில் இருந்து தவறுமா? 'மருண்டவன் கண்ணுக்குத் தெரிவதெல்லாம். . .'.

நாங்கள் கரந்தாய்க் குளத்தைக் கடந்து இயக்கச்சிக்கு அண்மையாகச் செல்லும் போது 'சகடை வருகிறது என்று சின்னமணி சொன்னார்.

கிளிநொச்சிப் பக்கத்திலிருந்து (தெற்கிலிருந்து வடக்கு நோக்கி) வை -8 விமானம் வந்து கொண்டிருந்தது. சுற்றிக்கொண்டிருந்த உலங்கு வானூர்தி இப்பொழுது ஆனையிறவு முகாமில் தரையிறங்கி விட்டது. சகடை வந்தவுடனேயே குண்டுகளைப் போடத் தொடங்கியது. 'சியாமாச் செட்டி' குண்டு வீச்சு விமானங்கள் வட்டமிட்டுப் பதிந்தே குண்டுகளை வீசும். 'அவ்ரோ' விமானமும் அப்படித்தான். ஆனால் வை -8 விமானம் அப்படியல்ல. விமானம் வான்வெளிப் பிரதேசத்தில் ஒரு சீராகப் பறந்துகொண்டிருக்கையில் இலக்கு நோக்கி குண்டுகளை வீசும்.

முதலாவது குண்டு எவ்விடத்தில் விழுகிறது என அவதானித்து நாம் தற்காப்பு எடுத்துக் கொண்டோம். இயக்கச்சி -சங்கத்தார் வயல்ப் பகுதியில் குண்டு விழுவதாக நாங்கள் அனுமானித்துக் கொண்டோம். நாங்கள் நின்ற இடத்திற்கு அருகில் சில பொதுமக்களும் இருந்தனர். இருந்தவர்களின் மனதில் பயத்தின் மிரட்சி முகங்களிலும், அவர்களின் பதற்றத்திலும் தெரிந்தது. நாங்கள் 'பயப்படாதீர்கள் பயந்து என்ன ஆகப்போகிறது" என அவர்களை உற்சாகப்படுத்தி விமானத்தை அவதானித்துக் கொண்டிருந்தோம். 8 வது நாளாகச் சண்டை நடைபெறுவதால் இடைவிடாத விமானத் தாக்குதலில் எவ்வளவோ அழிவுகள் அந்தப்பகுதியில் தெரிந்தன. 'லக்ஸ்மாண' மின் கோபுரம், கடைக்கட்டிடங்கள், வீடுகள், சந்தை, பாடசாலை, தேவாலயம் மற்றும் மரங்கள், செடிகள் எல்லாமே இடிந்தும், சிதைந்தும், அழிந்தும் காணப்பட்டன. ஊழி தாண்டவமாடிய தடயங்கள் நுவரத்தின் வடுக்களாக நெஞ்சைப் பிழிந்தன. 'ஒவ்வொரு நாள் தாக்குதலுக்குள்ளும் இந்தச் சனங்களும் இந்தப் பெடியனும் (போராளிகளும்) எவ்வளவு பாடுபட்டிருக்குதுகள்' என சின்னமணியின் என்னிடம் ஆதங்கத்துடன் கூறினார். உண்மையில் இவையெல்லாம் உணர்வைப் பிழியும் நிகழ்வுகள் தான். எம்முடன் இரண்டு ஆசிரியர்களும் நின்றார்கள். எல்லோருமாகப் பத்துப்பேர்வரையில் தான் அங்கு நின்றோம்.

போராளிகள் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். விமானத்தை நோக்கிச்சுடும் ஒலி கேட்டு காயப்படும் போராளிகளை எடுத்துச் செல்வதற்காக வாகனங்களும், சாரதிகளும், துணையாகவும், பராமரிக்கவும் வேறுசிலரும் ஆங்காங்கே நின்றனர். தண்ணீர் நிரப்பிய கொள்கலனை இரண்டு போராளிகள் தடியில் கொழுவி சிரமப்பட்டுத் தூக்கி வந்தனர். சின்னமணியும் நானும் அவர்களிடமிருந்து கொள்கலனை வாங்கி சைக்கிளில், கொண்டு செல்ல வேண்டிய இடத்திற்குக் கொடுக்கச் சென்றோம்.

விமானம் தொடர்ந்து குண்டுகளை வீசிக்கொண்டிருந்தது கீழே இருந்து விமானத்தை நோக்கிப் புலிகள் சுட்டுக்கொண்டிருந்தனர். தண்ணீர் கலனை

கருணாகரன் – தமிழீழம்

உரிய இடத்தில் கொடுத்துவிட்டுத் திரும்பினோம். இன்னும் விமானம் தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தது. இப்போது நாங்கள் முன்னர் நின்ற இடத்திற்கு வந்துவிட்டோம். அருகில் நின்ற பெண் ஒருவர் திட்டிக் கொண்டிருந்தார்.

'இந்தக் கொடுமை செய்வாங்கள் என்பயடி அறியாமல் செய்கிறாங்கள்? இப்படியும் ஒரு அரசாங்கமோ? எத்தனை பிள்ளைகள் இதில் அகப்படுமோ?" என ஆதங்கப்பட்டார்.

விமானம் குண்டினைப் போட்டுவிட்டு ஆனையிறவை கடந்து வரைப்பக்கமாகச் சென்று திரும்பி மறுபடியும் முதல் வீசப்பட்ட இலக்குக்கு குண்டு போட்டு விட்டு பாரதன் பக்கமாகச் சென்று திரும்பி . . . (கடக்குத் தெற்குத் திசையில் எட்டு வடிவில் பாதையமைத்து குண்டு போட்டு . . . அரைமணித்தியாலம் வரையில் அகோரத்தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தது. விமானம் யுத்தப் பிரதேசத்திற்கு நேராக வரும் பொழுது புலிகள் தரையிலிருந்து தாக்கி வேட்டுகளைத் தீர்த்துக்கொண்டே இருந்தனர். ஒவ்வொரு குண்டு போடப்படும்போதும் நாங்கள் அவதானித்துக் கொண்டே இருந்தோம். ஒரு ஊமல் அளவில் சிறியதாக, கறுப்பாக, குண்டு விமானத்திலிருந்து கீழே வந்து கொண்டிருக்கும். விமானத்திலிருந்து தள்ளப்பட்ட ஒரு நிமிடத்திற்கு உள்ளாக குண்டு பெரும் அதிர்வுடன் வெடிக்கும். இவ்வாறு ஏழு குண்டுகள் போடப்பட்டு விட்டன.

வட திசையிலிருந்து திரும்பி எட்டாவது குண்டும் போடப்பட்டபிற்று நாங்கள் விமானத்தில் கண் பதித்திருந்தோம். புலிகளின் துப்பாக்கிகள் முழங்கிக் கொண்டேயிருந்தன. திரும்பி வந்துகொண்டிருந்த விமானம் அந்தரத்தில் வான் வெளியில் தீப்பற்றியது. தீயும் புகையும் தெரிந்த சமவேளையில் பெரும் அதிர்வுடன் வெடித்தது. வெடியா அது? அதன் அதிர்வு மரம், செடி, நிலம் எல்லாவற்றையும் ஒரு கணம் ஆட்டிவைத்தது. இருதரமும், செவியும் இலவு பிழிந்தொழிந்தன. (இந்தச் சத்தமும் அதிர்வும் பன்னெழுமட்டுவாள் வரை இருந்ததாக அப்பகுதி மக்கள் கூறினார்கள்)

எல்லாம் ஒரு நிமிடத்திற்குள் முடிந்து பேய்கள் சங்காரமான பின், எங்களுடன் நின்றவர்கள் மகிழ்ச்சியில் சத்துமிட்டனர். ஆரவாரித்தனர். எல்லையற்ற சந்தோசம் அது.

விமானம் வானத்தில் வெடித்துச் சிதறியதும் கறுப்பாக ஒரு பொருள் மெல்ல மெல்லக் கீழே விழுந்து கொண்டிருந்தது. அப்பொருள் விழும்போது அதன் பின்னால் (மேலிருந்து கீழாக) புகைக் கோடு அப்பொருளுடன் தொடர்வது தெரிந்தது. (ஒரு விமானம் செல்லையில் புகைக் கோடு தெரியாது. அது வெண்மேகமாகத் தெரியும். இந்த கறுப்புக்கோடாகத் தெரிந்தது.)

விமானம் அழிந்ததில் எல்லோருக்கும் அளவு கடந்த மகிழ்ச்சி. தொலைவாரி தொலைஞ்ச போனாங்கள் எல்லட பெடியன் கெட்டிக்காரர் தான்' என்று அருகில் சொல்லிக் கேட்டது.

சிதைவுகள் கீழே விழுந்ததின் தூரத்தில் காட்டுத் தீ மூண்டெரியும் போது எல்லாரு கறுப்புகை தெரியுமோ அல்லாமே புகை மண்டலமாகத் தெரிந்தது. நீண்ட நேரமாக புகை மேற்கிளம்பியபடியே இருந்தது. மாலை சூரியன் மறைந்து இருள் பரவும் வரையில் புகைப்படலம் காற்றில் எழுந்துகொண்டே இருந்தது.

பொழுது இருட்டிவிட்டதால் அப்பாலே செல்ல முடியாமல் நாங்கள் பளைக்குத் திரும்பினோம். பளைக்கு அண்மையில் வரும்போது வழி நெடுக மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம். வாகைச் சாரதிகளின் சந்தோசப் பிரவாகம் சிறு பிள்ளைகளின் ஆனந்தத்திற்கு அளவேயில்லாமல் இருந்தது.

சண்டையாடிய பேய்கள் அழிவதில் யாருக்குத்தான் மகிழ்ச்சி இருக்காது?

வைச் விமானம் புலிகளால் சுட்டு விழுத்தப்பட்டது மட்டுமல்லாமல் விமானியின் சடலத்தையும், விமானத்தின் சிதைவுகளையும் புலிகள் மீட்டெடுத்தனர். மறு நாள் (திங்கள்) காலை 7.00 மணியளவில் நான் வாழும் பாணம் வந்த போது கொண்டாவில் பகுதியில் அவை பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

புலிகளின் வேகத்தினையும், செயற்திறனையும் நினைத்து வியந்தேன் முதல் நாள் இராணுவ நடவடிக்கை தீவிரமாக நடந்து கொண்டிருக்கும் போது அப்பகுதியில் இருந்து மாலை நேரம் சுட்டு விழுத்தப்பட்ட விமானத்தின் சிதைவுகளையும், விமானியின் சடலத்தையும் இவ்வளவு துரிதத்தில் இரவிரவாக மீட்டெடுத்துள்ளனர். புலிகள் 'புலிகள் தான்

வரலாற்றுச் சக்கரத்தைப் புரட்டக் கூடிய திறன் படைத்தவர்கள் விடுதலைப்புலிகள் என்பதற்கு இந்தச் சம்பவம் மேலும் ஒரு சான்று ■

பாலியல் வன்முறைக்கு மரண தண்டனை

சிறுமி ஒருவரைப் பாலியல் வன்முறைக்குட்படுத்திய பின் கொடூரமான முறையில் படுகொலை செய்த இளைஞர் ஒருவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் 30 ம் திகதி சாரணை மட்டக்களப்பு, கந்தசாமி கோயில் வீதி என்ற சிறுமியைச் சாரணை அன்ன என அழைத்துச் சென்று அவர் மீது பாலியல் வன்முறையில் ஈடுபட்டபின் வாய்க்குள் மண்ணைத் திணித்துக் கழுத்தைத் திருகியும் படுகொலை செய்து தொட்டியக் அருகே இட்டதைச் சேர்ந்த ஐயாத்துரை ரவிராஜ் (வயது 17) என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு கட்டுப்படுத்தப்பட்டார். தமிழீழ விடுதலைப்புலிகளால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவில், மேற்படி நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதே வேளை வைத்திய பரிசோதனை அறிக்கைகளும் மரண விசாரணைகளும் இதனை ஊர்ஜிதப்படுத்தியதைத் தொடர்ந்து மேற்படி இளைஞருக்கு விடுதலைப்புலிகள் மரண தண்டனைத் தீர்ப்பை வழங்கியுள்ளதாக, விடுதலைப்புலிகள் பிரமுகர் பொற்கோ கொண்டாவில் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

மீட்புநிதி செலுத்துவதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

■ நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி அறிவிப்பு

இதுவரை மீட்புநிதிக் கடன் திட்டத்திற் பங்கேற்காத வசதி உள்ளவர்கள் தமிழீழ நிதியிற்கு தங்கள் பங்களிப்பைச் செய்வதற்கு ஒரு வாய்ப்புத் தர தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினர் முடிவு செய்துள்ளனர். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்துமாறு வசதி உள்ள அனைவரையும் நிதித்துறையினர் அறிக்கை ஒன்றின் மூலம் வேண்டியுள்ளனர்.

அவ் அறிக்கையின் விபரம் வருமாறு:

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகக் கடினமான நீண்ட தூரத்தைக் கடந்து வந்துள்ளோம். சிறிலங்கா அரசினதும் படைகளினதும் ஒடுக்குமுறைக் கொடுமைகள், அட்டூழியங்கள் இந்திய வல்லாண்மையின் கொடுங்கோண்மைகள் இடையேயும் முழு உலகமும் வியக்கத்தக்க வெற்றிகள் பலவற்றைப் பெற்று தமிழீழத்தின் விடுதலையை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றோம்.

எமது வெற்றிகளுக்கு அடித்தளமாக அமைந்தவை எமது தலைவரின் ஆளுமையும், தூரநோக்கும், விடுதலைப் புலிகளின் வீரமும், ஈகமும் மட்டுமன்றி எது நடந்தாலும் இறுதிவரை எம்மண்ணிலேயே வாழ்வோம் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வரும் தமிழீழ மக்களின் மன உறுதியும், பங்களிப்புமேயாகும்.

பல்வேறு நெருக்கடிகளை விடுதலைப் புலிகள் எதிர் கொண்ட போதெல்லாம் பக்கத்துணையாய், பங்காளர்களாய் நின்றவர்கள் தமிழீழ மக்கள்.

1983 யூலை 23 இல் சிங்களப் படையினர் 13 பேர் கொல்லப்பட்ட போது தமிழீழத்திற்கு வெளியே ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் பலர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நிறையாடப்பட்டன. தமிழர்கள் தஞ்சம் தேடி தமிழீழத்திற்கு ஓடி வந்தனர். சிறலங்கா அரசு அந்தக் கலவரத்தின் பின்னணியில் இருந்து செயற்பட்டது.

1983 ற்குப் பின்னர் இன்று வரை ஆயிரக்கணக்கில் சிங்களப் படையினர் பேரில் கொல்லப்பட்டுள்ளனர். 08-08-92 அன்று சிங்கப் படையின் அதி உயர் தளபதிகள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர். அன்று தமிழர்களுக்கு எதிராக ஏவி விடப்பட்ட வன்முறை வெறியாட்டம் இன்று சிங்கள அரசுக்கெதிராகத் திரும்பியுள்ளது. இந்தக் கலவரத்தில் அமைச்சர்கள் தாக்கப்பட்டுள்ளனர். அரச சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. சிங்கள அரசியலாளர்கள் தமிழர்களைப் பகடைக்காயாக பயன்படுத்திய காலம் மலையேறி விட்டது என்ற உண்மை இதிலிருந்து புலனாகின்றது. சிங்களவரின் இந்தகைய மனமாற்றம் விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போரின் விளைவேயன்றி வேறில்லை.

1977 ம் ஆண்டு சிறிலங்கா அரசின் உண்மையான பாதுகாப்புச் செலவினம் 43 கோடி, 58 நூறாயிரம் (இலட்சம்) ரூபாவாகும். 1991 இல் இத்தொகை 1566 கோடி, 37 நூறாயிரம் ரூபா. 1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டப் பாதுகாப்புச் செலவின ஒதுக்கீடு 1542 கோடி, 40 நூறாயிரம் ரூபா. இத்தொகை துணை ஒதுக்கீட்டடிஇனூடாக 2000 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முடிவில் உண்மையான செலவினம் 2000 கோடி ரூபாவை விஞ்சிவிடலாம்.

எம்மைப் பொறுத்தவரை மிகக் குறைந்த வளங்களுடன் சிறிலங்கா அரசின் பொருண்மியத் (பொருளாதாரம்) தடைகளுக்கு இடையே 2,000 கோடி ரூபாவை செலவு செய்யும் சிங்கள அரச படையுடன் போர் புரிகின்றோம். நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப் போர் தமிழ் மக்களால் நடாத்தப்படும் போரேயாகும். போரில் வெற்றி பெறுவதற்கு தமிழீழ மக்கள் தம்மாலான அனைத்தையும் செய்ய வேண்டும். இது அவர்களது வரலாற்றுக் கடமையாகும்.

தமிழீழ மீட்பு நிதிக்கான கடனை நாம் திரட்டத் தொடங்கிய போது இக் கடனைத் திருப்பித் தருவார்களா என்று ஐயப்பட்டவர்களும் உண்டு. ஆனால் நாம் திருப்பிச் செலுத்தி வருகின்றோம். தமிழீழ மீட்பு நிதிக்கு உதவக் கடாது என்ற நோக்கம் கொண்டிருந்த வசதி படைத்த சிலரிடம் நாம் இரண்டு பவுனுக்கு மேலாக வற்புறுத்தி வாங்கியது உண்மையே.

நாம் கடனை மீளளிக்கத் தொடங்கியவுடன் இது ஒரு ஏமாற்று வேலை என்றார்கள் சிலர். ஆயினும் தொடர்ந்தும் நாம் மீளளித்து வருகின்றோம். பொறுக்க முடியவில்லை மீண்டும் கடுதலாகப் பெறுவதற்காகவே இரண்டு பவுணை நாம் மீளளிப்பதாக கதைகளைக் கட்டிவிட்டார்கள். இதனால் கடனை மீளளிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் சிலர் மீளப் பெறுவதற்கு தயங்கினார்கள். ஆனால் மீண்டும் மீண்டும் அவர்களுக்கு உண்மை நிலையை தெளிவுபடுத்தி திருப்பிக் கொடுத்துள்ளோம்.

இந்த நேரத்தில் தேவையுடைய தமிழீழ மீட்பு நிதிக்கடன் திட்டத்தில் பங்கேற்காத வசதி உள்ளவர்கள் 10,000 ரூபாவை மட்டும் கடனாகத் தந்துதவி தமிழீழ விடுதலைப் போரில் தங்கள் பங்களிப்பைச் செய்வதற்கு ஒரு வாய்ப்பைத் தர முடிவு செய்து உள்ளோம். இந்த வாய்ப்பினை பயன்படுத்துமாறு வசதியுள்ள அனைவரையும் வேண்டி நிற்கின்றோம். ■

தோட்ட தமிழ் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்கள் நியமனம்

தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ் ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் நிலையில் கனுத்துறை மாவட்டத்திலுள்ள பெருந்தோட்டங்கள் அமைந்துள்ள தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள மொழியில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக புவார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்துமட, அகலவத்தை, லத்தீங்கள போன்ற வட்டாரங்களிலுள்ள தமிழ் பாடசாலைகளிலேயே இவ்வாறாக சிங்கள ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள்.

அதேக தோட்டப் பாடசாலைகளில் ஆரம்பக்கல்வியைப் புகட்டுவதற்கே தமிழ் ஆசிரியர்கள் இல்லாதிருக்கும் போது இவர்களால் எப்படி தமிழ்ப்பிள்ளைகளுக்கு பாடம் கற்பிக்க முடியும் என்றும் இன்னும் மத்துமட வட்டாரத்தில் உள்ள ஒரு சில பெருந்தோட்டங்களில் சிங்கள இனத்தவர்களே அதிபர்களாக கடமையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையை தொடர்ந்து நீடிக்குமேயானால் இம் மாவட்ட பெருந் தோட்டங்களில் அமைந்துள்ள தமிழ்ப் பிள்ளைகளின் எதிர்காலம் என்னவாகுமோ என பெற்றோர் பலர் கவலை தெரிவித்துள்ளனர். ■

வடமராட்சியில் பனம் விதைகள் நாட்டப்பட்டன

வடமராட்சி கரவெட்டி வட்டவை பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 1450 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.

இவை 10X10 க்கு ஒரு விதையாக இரண்டு நிரைகளில் நடப்பட்டது. இத் திட்டத்தில் கிராமிய கற்பதிக் குழு உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இவ் விதைகள் அனைத்தும் வல்வை வெளியில் உள்ள முனியப்பர் ஆலய கற்றாடலில் இருந்து பகுத்தித்துறையான் விதியில் அமைந்துள்ள வல்வை சந்தி வரைக்குமான நிலப்பரப்பிலேயே நாட்டப்பட்டன. ■

தம்பலகாமத்தில் வீடுகள் சேதம்

தம்பலகாமம் பகுதியில் அண்மையில் வீசிய பலத்த காற்றினால் கிடுகுகளால் வேயப்பட்ட பல வீடுகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தம்பலகாமம் சந்திக்கு அண்மையில் உள்ள நெல்சேமிக்கும் நிலையத்தில் இருந்து பாலம் போட்டாறு வரையுள்ள கண்டி திருகோணமலை வீதியின் இருமருங்கிலும் நிறுவனம் ஒன்றினால் புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளே பெரும்பாலாக சேதம் அடைந்துள்ளன.

வீடுகள் பலவற்றின் தகர மேற்கூரைகள் தூக்கி எறியப்பட்டுள்ளதாகவும் சாய்ந்தும் உள்ளன. 35 க்கும் அதிகமான வீடுகள் சேதம் அடைந்துள்ளன. ■

ஆசிரியை வெட்டிக்கொலை

நால்வருக்கு மரண தண்டனை

பளைப் பகுதியில் கடந்த வருடம் பாடசாலை ஆசிரியை ஒருவரைப் படுகொலை செய்ததுதொடர்பாக நான்கு பேருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் பிரமுகர் பொற்கோ தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்படி கொலை தொடர்பாக அவர் விளக்குகையில் கடந்த வருடம் யூன் மாதம் 25 ஆம் திகதி பளையில் உள்ள தர்மக்கேணி என்னுமிடத்தில்அதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி தர்சனா (வயது 24) என்னும் ஆசிரியை பாடசாலை முடிந்துவரும் வழியில் நண்பகல் 1.00 மணிக்கும் 1.30 ற்கும் இடையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

பளை, சின்னத்தாளையடி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியையான இவர் மீது அதே இடத்தைச் சேர்ந்த மினிபஸ் உரிமையாளரும், புகைப்படப் பிடிப்பாளருமான நல்லையா நவரத்தினராசா (வயது 31) என்பவர் ஒருதலைக் காதல் கொண்டிருந்தார். இவர் பல தடவைகள் தனது காதலை வெளிப்படுத்தியும் அவர் அதற்கு இணங்க மறுத்துள்ளார்.

இதனால் மேற்படி நபர் தனக்குக் கிடைக்காதது வேறு எவருக்கும் கிடைக்கக்கூடாது எனக் கருதி தர்மக்கேணி பளையைச் சேர்ந்தவர்களான குலசேகரம் மகேந்திரராசா (வயது 34), செல்லையா கந்தரம்பிள்ளை (வயது 40) மற்றும் மிருசுவில் கெற்பலியைச் சேர்ந்த விவசாயியான சண்முகம் மாப்பாணி ஆகியோரை இணைத்து நான்கு திட்டமிட்டு இப்படுகொலையை நடாத்தியுள்ளனர்.

இக் கொலையாளிகள் சம்பவ தினம் அவ்வூரில் நடைபெற்ற கோவில் திருவிழாவைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மேற்படி கொலையைச் செய்து விட்டு மேற்படி கோவிலில் பக்தர்களாக நடித்து காவடி எடுத்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் மேற்படி நபர்களைக் கைது செய்த விடுதலைப் புலிகள் தீவிர விசாரணைகளை மேற்கொண்ட போது மேற்படி நான்கு பேரும் செல்வி தர்சனாவின் கொலையில் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தமை நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்தே மேற்படி நான்கு கொலையாளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மரண தண்டனை தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

இதே வேளை மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பாக குலசேகரம் மகேந்திரராசா என்பவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டபின் கடந்த 09-05-1992 இல் கசவீனம் காரணமாக அங்கு மரணமானார் என அவர் மேலும் தெரிவித்தார். ■

மேதின ஊர்வலங்களின் போதும் தமிழீழ மக்கள், மாவீர்களின் நினைவாக அலங்கார ஊர்திகளை எடுத்துச் சென்று அவர்களின் நினைவைக் கௌரவித்து வருகின்றனர்

கண்ணீர் விட்டே வளர்த்தோம்

கரும்பறவை

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வளர்த்தெடுக்கும் போது, தென் தமிழீழப் பகுதிக்கு ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுகையில் சந்தித்த சம்பவங்கள், எதிர் கொண்ட நடவடிக்கைகள் கற்றுக் கொண்ட அனுபவங்கள் என்பன இங்கு நினைவு கூரப்படுகின்றன. தேசிய விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்துள்ள இந்த வேளையில் உணர்வுபூர்வமிக்கதான எங்களுடைய போராட்டத்தை விளக்குகின்றது இக்கட்டுரை.

சென்ற இதழ் தொடர்ச்சி

சிலம்பத்தையில் பரமதேவாவையும், தீசனையும் தங்கவைத்தோம். ஆயுதங்களையும் பகிர்ந்து கொண்டோம். ஏனெனில் எல்லோரும் ஒரேயடியாக பயணமாகும்போது வழியில் ஏதாவது நடந்தால் முழு ஆயுதமுமே போய்விடும். ஆகவே, ஒரு பகுதியினருக்கு ஏதாவது நடந்தாலும், மறுபகுதியினரின் ஆயுதங்களாவது மட்டக்களப்புக்கு போகவேண்டும் என்பதில் அனைவரும் உறுதியாக இருந்தோம்.

நானும் இளங்கோவும் மட்டக்களப்பு எல்லைக்குள் காலைவைத்தோம். நீண்ட நாட்களுக்கு முன்னரே நாம் புறப்பட்டுவிட்டோமாகையால் எமக்கு எவருடனும் தொலைத் தொடர்பு இருக்கவில்லை. மட்டக்களப்பு நிலமையும் தெரியாது. ஆகவே விடயம் தெரியாமல் எமது பழைய தொடர்புகள் இருந்த வீடுகளுக்குப்போகவும் முடியாது. ஆகவே தண்ணீரையும், சாப்பாட்டையும் எடுத்துக் கொண்டு நாம் தனியாகத் தங்கினோம். வெருகலுக்கும் வாகரைக்கும் இடையில் உள்ள சிறிய காட்டுப் பகுதியில் -சிறிய மலை ஒன்றில் நாம் தங்கினோம். வாகரையில் இராணுவ முகாம் இருப்பதால் மிகவும் அவதானமாகவே இருக்கவேண்டியிருந்தது. இளங்கோ மட்டக்களப்பு நகரத்திற்குச் சென்று நிலமையை அவதானித்த பின்னர் சந்திரண்ணாவை (காசி ஆனந்தனின் சகோதரர்) அழைத்து வந்தார்.

ஒரு அதிகாலைப் பொழுதில் எமது பயணம் மீண்டும் தொடர்ந்தது. வாகரை இராணுவ முகாமைத் தவிர்த்து பிரதான வீதியால் எமது பயணம் தொடர்ந்தது. இரு தடவைகள் மோதி சென்ற படையினரைச் சந்திக்க நேர்ந்தது.

மட்டக்களப்பு நகருக்குள் நாம் சென்றதன் பின்னர் இளங்கோவும், சந்திரண்ணாவும் மீண்டும் சச்சம்பலத்தைக்குச் சென்றனர். பரமதேவாவையும், தீசனையும் சந்திரண்ணையுடன் அனுப்பி வைத்தார் இளங்கோ. உபஇயந்திரத் துப்பாக்கிகளும், றிப்பிட்டர்களும் மட்டக்களப்புக்கு வந்துவிட்டன.

இயக்கத்தில் இணைந்து பயிற்சிக்குப் போனவர்கள் பயிற்சி முடிந்து வந்ததும் பெற்றோரைச் சந்திக்க ஏற்பாடு செய்வது வழக்கம். ஆனால் பரமதேவாவின் விடயம் சிக்கலானது. பரமதேவா ஏற்கனவே மட்டக்களப்பில் பிரபலமானவர். இவர் வந்து நின்கிறார் என்றால் படையினர் உசாராகிவிடுவார்கள். அதைவிட அவர் தாய் தங்கியிருந்த வீடு (இவரது சகோதரியினுடையது) மட்டக்களப்பு பிரதான முகாமிற்கு மிக அருகிலேயே இருந்தது. என்றாலும் சந்திப்பைத் தள்ளிப் போட முடியாது. பரமதேவாவை அனுப்பினேன். சிக்கலை அவருக்கு விளக்கினேன். இறுதியாக,

"அம்மாவை அங்கை போய்ச் சந்திக்கிறதெண்டாலும் சரி; இல்லாட்டி வேற வீட்டில சந்திக்க ஒழுங்கு செய்யிறதெண்டாலும் சரி... உங்கட விருப்பம்" என்றேன்.

அதற்கு பரமதேவா கூறிய பதில், போராட்டத்தின் மீதும் தனது தாயின் மீதும் பரமதேவா வைத்திருந்த பாசத்தை தெளிவாக எடுத்துக் காட்டியது.

"நான் அம்மாவை வீட்டில மட்டுமில்ல, எங்கேயும் சந்திக்க விரும்பவில்லை. நான் போராட்டத்தில இறங்கினதுக்குப் பிறகு அம்மா என்னை ஒரு கைதியாகத் தான் சந்திச்சிருக்கிறா. ஒரு வீரனாய்ப் பார்க்கயில்லை! அதால நான் இனி ஒரு பீ(ர்)ஸ்ட் செய்து அதில எடுத்த ஆயுதத்தைக் கொண்டு போய்த்தான் அம்மாவுக்கு முன்னால நிக்க வேணும்." எவ்வளவு வித்தியாசமானவன் இவன்?

ஆனால், அவனது கனவுகள்.....

பரமதேவா சிறையிலிருந்து தப்பிய ஒரு வருடப் பூர்த்தி தினமான 22.02.1984 அன்று கதவாளிசிக்குடி காவல் நிலையத்தின் மீது தாக்குதல் தொடுத்தோம். கைக்குண்டெறிவதில் தேர்ச்சி பெற்ற சந்தோசம் இந்தத் தாக்குதலுக்கும் வரவழைக்கப்பட்டிருந்தான். திருமலையிலிருந்து தாக்குதல், ஒட்டிசுட்டான் காவல் நிலையத் தாக்குதல் போன்ற தாக்குதல்கள் 'கைக்குண்டு எறிவதற்கு சந்தோசம்தான் சரியான ஆள்' என்ற நிலையை உருவாக்கியிருந்தன. (நாங்களே தயாரித்த கொழுத்தி எறிகுண்டுகள் தான் அப்போது நாங்கள் பாவிப்பது) இளங்கோவின் குழந்தைக்கு உடல் நலமில்லாததால் அத்தாக்குதலில் ஈடுபட இளங்கோவை நாம் அனுமதிக்கவில்லை. குழந்தையின் சுகவீனத்தைவிட தாக்குதலுக்கு தன்னை அனுமதிக்காததே பெரிய கவலையாகத் தெரிந்தது இளங்கோவுக்கு. காயமடைந்தவர்களை பராமரிக்க வேண்டுமென்பதற்காக சந்திரண்ணைக்கும் தாக்குதலில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. மொத்தம் 18 பேர் இத்தாக்குதலில் கலந்து கொண்டோம். இதில் சந்தோசம், பரமதேவா, யோகன், கட்டவுன், காந்தன், சான்ஸ், ரவி, சிவம் அண்ணர், பிரான்சிஸ், டேவிட், தீசன், கணேசன், நான் ஆகிய 13பேரே இயக்கத்தின் முழுநேர உறுப்பினர்கள். சாரதிகளாக வந்த இருவரும் ஆதரவாளர்களே. அதில் ஒருவர் திருமணம் செய்து இருவாரங்கள் கூட ஆகவில்லை. (இவர் பின்னர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.) நான்கு றிப்பிட்டர்கள், இரண்டு உபஇயந்திரத் துப்பாக்கிகள், ஒரு வேட்டைத்துப்பாக்கி (ஒரு ஆதரவாளரிடம் பெற்றது) என்பனவே இத்தாக்குதலுக்கு நாம் கொண்டு சென்றவை. (இதிலும் ஒரு றிப்பிட்டர் வேலை செய்யவில்லை)

இத்தாக்குதல் நாம் எதிர்பார்த்ததற்கு மாறான விளைவையே கொடுத்தது. பரமதேவாவையும் ரவியையும் நாம் பறிகொடுக்க நேர்ந்தது. தாக்குதலின் ஆரம்பத்திலேயே ரவியும் பரமதேவாவும் காயமடைந்து விட்டனர். ஏனினால் கத்திக் கொண்டிருந்த ரவியைத் தேற்றிக் கொண்டிருந்தார் பரமதேவா. 'பார்! எனக்கும் தான் காயம் உள்ளே போனவங்கள் வெற்றியோட வருகாங்கள். கொஞ்சம் பொறு' என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் தோல்செல்லச் செல்ல நிலமை மோசமாகவே இருவரும் தீர்மானித்து சயனைற் கட்டிக்கொண்டிட்டனர். தாக்குதலை நிறுத்தி விட்டு நாம் பின்வாங்கும்போது இருவரையும் தூக்கப் போனோம். ரவி பேச்சு மூச்சற்றுக் கிடந்தான். அதைச் சொல்லத்தான் பரமதேவா கவிரோடு இருந்தாரோ?

'நாங்கள் ரெண்டு பேரும் கதைச்ச முடிவெடுத்து சயனைற் அடிச்சிட்டம். அதைவிட எங்களெல்லாம் உங்களால தூக்க முடியாது. (அவர் (கட்டுமன் தான் தேகமுடையவர்) நீங்கள் எல்லோரும் தம்பிப்போங்கோ. எனக்காக ஒன்றும்டும் செய்யுங்கோ. அம்மாட்டைப் போய்ச் சொல்லுங்கோ உங்கட மகன் சண்டையிலதான் செத்தானெண்டு எண்டெண்டா அண்ணர் புளட்டில இருக்கிறார். அதால வேறமாதிரிக் கதை வரும். அதால அம்மாட்டைச் சொல்லுங்கோ-நான் சண்டையிலதான் செத்தனெண்டு'.

வெற்றிகரமான தாக்குதல் ஒன்றின் பின்னால், அதில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் பெருமையுடன் தாயின்முன்னால் நிற்கவேண்டுமென்று கனவு கண்ட பரமதேவா அது நிறைவேறாதென்ற நிலையிலும் இயக்கத்தின் மீது பழிச்சொல் விழக் கூடாதே என்ற அவரது தூய்மை இதைவிட இயக்கங்கள் ஒவ்வொன்றையும் பற்றிய அவரது கணிப்பு?

அந்தத் தாக்குதலின் விளைவாக கைப்பற்றப்பட்ட 303 றைபிளுக்கு 'ராதாரவி'எனப் பெயரிட்டோம்.

. . . .

மட்டக்களப்புக்கும் மூதூருக்கு மிடையிலான தொடர்புகளை இளங்கோவே கவனித்துக் கொள்வார். ஒருமுறை காட்டு வழியாக அவரும் காந்தனும் டேவிட்டும் செல்லும்போது வீதிமைப்பு தொடர்பான வேலைகளை மேற்கொள்ளும் சில சிங்கள உத்தியோகத்தர்களைக் கண்டுவிட்டனர். புதிய சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளவே இவ்வீதிமைப்பு திட்டமிடப்பட்டது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் மட்டக்களப்பு மாவட்டமும் திருமலை மாவட்டமும் சிங்களக் குடியேற்றத்தால் துண்டாடப்பட்டிருக்கும். ஆனால் அவர்கள் இவர்களைக் காணவில்லை! இவர்கள் காட்டிற்குள் ஒழிந்து கொண்டனர். காலையிலிருந்து மாலைவரை அலைவுறுவாத நிலை. சாப்பாடும் இல்லை. தண்ணீரும் இல்லை. கிடை என்று காட்டுக்காலை மட்டும் சுற்றிக் கொண்டு இருந்தனர். பாழ்பாணத்திலிருந்து வாலிபர்கள் ஆயுதங்களையும் போராளிகளையும் மட்டக்களப்புக்கு கொண்டு வருவதுமாகவே இவர்களது சிக்கல் நிறைந்த பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டன. இயக்கத்தை இளங்கோவுக்கு அறிமுகப்படுத்தியவர் கிருபா-மலையர் கேர்த்த நல்லதம்பி என்பவர். இந்நிலையில், 'எனக்கு பின்னை கிடைக்கப் போகுது. வீட்டில எனக்கு அவரை விட்டா உதவி ஒண்டுமில்ல. அதால கொஞ்ச நாளைக்கு அவரைத் தூர இடம் ஒண்டுக்கும் அனுப்பாதையிங்கோ' என்று செல்லிஷாவினார் தெவுந்தி (இளங்கோவின் மனைவி). நானும் ஓம்படி கொண்டேன். ஆனால் இளங்கோவின் மூன்றாவது பிள்ளை தேன்மொழி பிறந்த பதினோராம் நாள் இந்தமுறை கட்டாயம் ஆட்கள் வருகிறார்கள். ஆயுதங்கள் வருகின்றன என வாழ்ப்பாணத்திலிருந்து ஒரு செய்தி கிடைத்தது.

ஏற்கனவே இரு தடவைகள் இவ்வாறு செய்தி வந்து மட்டக்களப்பிலிருந்து மூதூருக்குச் சென்று வெறுங்கையுடன் திரும்பியிருந்தவர் இளங்கோ. இந்த முறையும் கிடைக்குமென்பதில் அவருக்கு நம்பிக்கை இல்லை.

இந்நிலையிலும் இளங்கோவைத் தான் அனுப்பவேண்டும். ஏற்கனவே போயிருந்தாலும் இளங்கோவுக்குத் தெரிந்த அளவுக்குச் சரியாக காட்டுப்பாதையைப் பிடிக்கமாட்டான் காந்தன். இந்த ஒரு தடவை போனால் சரியாகப் பிடித்துவிடுவான். ஆனபடியால் இந்தமுறை மட்டும் இளங்கோவை மூதூருக்கு அனுப்புவோம். இதுதான் கடைசித் தடவை இனிமேல் காந்தன்தான் இந்த வேலைக்குப் பொறுப்பு என தீர்மானித்த நான் எனது தீர்மானத்தை இளங்கோவுக்குச் சொன்னேன். இளங்கோ காந்தனையும் கூட்டிக் கொண்டு மூதூருக்குப் புறப்பட்டார்.

தன்னியக்க றைபிள்களுடன் முதல் தொகுதிப் போராளிகள் மட்டக்களப்புக்குச் செல்லப் போகிறார்கள் எனவே வழியில் பிரச்சினையில்லை' என்பதை உறுதிப்படுத்தி பின்னரே அவர்களை வெருகல் ஆற்றுக்கு (மட்டக்களப்பு திருமலை எல்லை) அப்பால் கூட்டிக்கொண்டு போகவேண்டும் எனக்கருதி இளங்கோ ஜெகந்திரனுடன் ஒரு மிதிவண்டியில் வெருகலை நோக்கி வந்தார்.

வெருகலை அண்மித்தபோது தான் (ஒரு வளைவில்) துறைக்கு அப்பால் பேரூந்து நிற்பதைக் கண்டார். உடனே 'எனக்கு சந்தேகமாய் இருக்கு. சைக்கிளைத் திருப்பு' என்று ஜெகந்திரனிடம் கூறினார். ஜெகந்திரன் சைக்கிளைத் திருப்பினான். சடக்கென வேட்டொலிகள் கேட்டன.

தொடர்ச்சியை பக்கம் ....

"தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நாம் கைப்பற்றிய ஆயுதங்களில் பெரும்பாலானவை மட்டக்களப்பு -அம்பாறைப் பிரதேசத்திலிருந்தே பெறப்பட்டன. இன்று வாழ்ப்பாணம் கோட்டை எம்மால் விடுவிக்கப்பட்டிருக்கின்ற தென்றால் மட்டக்களப்புப் போராளிகளும்தான் அதில் பங்காளிகள். மட்டக்களப்பு போராளிகளும் அங்கு வீரச்சாவு அடைந்துள்ளார்கள்".

ஒரு தோழனின் நினைவலைகளில் இவன்

–அப்பையா அண்ணை–

இன்று எமது இயக்கம் எவ்வளவு பெரிய அமைப்பாக வளர்ந்து... எவ்வளவு பெரிய சாதனைகளையைப் புரிந்து... எண்ணிப் பார்க்கின்றேன்... அன்று இந்த இயக்கம் இப்படியெல்லாம்... வளர வேண்டுமென்று கனவு கண்டவர்கள் இந்த இயக்கத்தைச் கமக்கின்ற தூண்களாக நின்றவர்கள்... இன்று எங்கள் நினைவுகளில் தீவிப்பவர்களாகி எத்தனை காலம்...

இவர்களில் ஒருவன் தான் லெப்டினட் சங்கர் எந்தக் கடுமையான காரியத்தையும் சிரித்த முகத்தோடு ஏற்றுக்கொண்டு செயலாற்றுவான். இவனுடைய தாக்குதல் அணியப்பிரிவில் பங்கு பற்றுகின்ற வீரர்கள் எந்தக் கிலேசமும் இன்றி தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் கரும மாற்றுவர்.

எமது விடுதலை இயக்கத்தின் அத்திவாரத்தை ஆட்டங் காணச் செய்யும் முயற்சியில் ஈடுபடுகின்ற இனத்துரோகிகளையும் உளவுப் படைகளையும் ஆட்டங்காணச் செய்வதே எமது போராட்டமாகிப் போன எத்தனை பெரிய சாதனைகளை இவன் செய்தான்.

தலைவர் தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்டு விட்டார் என்று செய்தி கேள்விப்பட்டதும் நாமெல்லாம் மிகவும் ஆத்திரமும் வேதனையும் துடிப்பும் அடைந்தோம். சங்கரும் அப்படியே தலைவர் மீது ஆழ்ந்த அன்பும் பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்தான்.

தலைவரை விடுவிக்க என்ன செய்யலாம்...? என்றொருடைய கேள்வியும்இதுவே. இறுதியில் நாமெல்லாம் ஒன்று சேர்ந்து ஆலோசித்து தலைவரை விடுவிப்பதற்காக பல முயற்சிகளில் இறங்கினோம். இந்த வகையில் சங்கரின் பங்கு மிகப் பெரியது. சற்றில் நாம் வெற்றி கண்டோம்.

தெல்லியடி பொலிஸ் ஜீப் தாக்குதல் இவனின் வீரத்திற்கு எடுத்துக்காட்டு... சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் இவனின் சாதனை பெரியது. தாக்குதலின் முடிவில் கூட காயப்பட்டவர்களையும், ஆயுதங்களையும் கொண்டு வந்து சேர்ப்பதில் இவனின் வேகம்... விரைவு... பலம்...

எதிரியின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு விடுதலைக்காய் வியர்வை சிந்திக் கொண்டிருந்த

சங்கர் ஒரு நாள்... இரத்தத்தை சிந்திக் கொண்டிருந்தான்... ஆம் அவன் வாழ். குடாநாட்டில் ஒரு வீட்டில் வைத்து எதிரியால் கற்றி வளைக்கப்பட்டு கடப்பட்டு விட்டான். வலிற்றில் குண்டை வாங்கிக் கொண்டும், சிங்களச் சிப்பாய்களை மாற்றி விட்டு ஓடிக் கொண்டிருக்கிறான். கையில் ஒரு துப்பாக்கி (பழைய 45) அவனுடைய இலட்சியப் பற்றும் உறுதியும் அர்ப்பண உணர்வும் அவனின் இறுதி முயற்சிக்கு கைகொடுத்தன. வலிற்றில் இருந்து குருதி வழிந்தவாறே இருக்க... அவன் அனுபவித்துக் கொண்டிருந்த ரணவேதனையையும் மீறி கால் தசைகள் பலமாகவும் வேகமாகவும் இயங்கி அவனை தோழர்களிடம் கொண்டு வந்து சேர்த்தது.

எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் அவனைப் படகு மூலம் தமிழ் நாடு கொண்டு போய்ச் சேர்த்தோம். தன் உடலில் உள்ள குருதி முழுவதையும் சிந்திய நிலையில் சங்கர் வலுவிழந்து கிடந்தான். முதன்முதலாக எங்கள் குடும்பத்தில் ஒருவன் மண்ணுக்காக குருதியைச் சிந்தி விட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றான்... அப்பொழுது நாம் 20-25 பேர்கள் தான் இருப்போம். சங்கர் மீதுள்ள அன்பாலும் பாசத்தாலும் ஒரு தந்தையைப் போன்று தலைவர் மிகவும் சோகமே உருவாகக் காணப்பட்டார்.

தன் உடலில் உள்ள குருதியை சங்கரின் உடலுக்குக் கொடுத்தார்... அவன் உயிரோடு பிழைத்துத் தன்னோடு விடுதலைப் பணியினைத் தொடருவான் என்று... நம்பிக்கையை மெதுமெதுவாகக் கரைத்துக் கொண்டு... சங்கர் தலைவரின் மடியிலேயே நிரந்திரமாக படுத்துக் கொண்டான். ஆம் அவன் நம் எல்லோரையும் விட்டுப் பிரிந்து விட்டான். நம் உடன் பிறப்பு நம்மெல்லோரையும் விட்டுப் பிரிந்து விட்டது.

இத்தகைய துயரம் நிறைந்த நாளே இன்று நம் தோழர்கள் அனைவரினதும் நினைவு நாளாக நம் நெஞ்சங்களை நெருடுகின்ற நாளாக... எங்கள் உயிரானவர்களை உணர்கின்ற நாளாக... மாவீர் நாள் என்று பிறப்பெடுத்திருக்கிறது.

நன்றி
விடுதலை இரத்தத்தில்
முதற்துளி லெப்டினன்ட்
சங்கர் ■

நீயே முதல் விதை ஆனாய்

சங்கர் உனக்குச் சாவோர் முடிவே!
எங்களுக் கோ நின் சாவுதான் தொடக்கம்!

கண்கள் மூடிய களத்தின் முதற்புலி
உன் வழி எங்கள் உயிர் வழி ஆனது!

பாவிகள் தமிழன் உயிர் பறித்த நாள்
சாவினைத் தடுக்கச் சாவினை ஏற்றாய்...!

விழுவோ ருக்காய் அழுவோர் மண்ணில்
அழுவோருக்காய் விழுந்தாய்... பார்த்தோம்!

தழைக்க ஓங்கித் தமிழீழப் பொழில்
முளைக்க நீயே முதல்விதை ஆனாய்!

எங்கள் மண் உன் சாவில் உயிர்க்கும்!
எங்கள் வாழ்வுன் உதிர்வில் பூக்கும்!

வரலாற்றில் அழியாத வரியாய் ஆனாள்

விண் நின்ற இருள்தனை
அடித்தவெண் முழுநிலா
வீழ்ந்த தென்ன?
மண்ணின் நோய் தீர்த்தமா
மருந்துச் செடி சாய்ந்து
மடிந்த தென்ன?
கண்முன் கொடும் பாம்பைக்
கடித்த மயில் சாவு
கண்ட தென்ன?
பெண்விடு தலைப்புலி
மாலதி எமைவிட்டுப்
பிரிந்த தென்ன?
சிங்களர் காலின் கீழ்
வதைபட்டார் சிதைப்பட்டார்
தமிழீ முத்தார்...
மங்கையர் தமிழ்மண்ணில்
அழ நின்றார்... ஒருமங்கை
புலியாய் ஆனாள்!

பொங்கினாள் இளம்பாவை!
களம் போனாள்... எதிரிகள்
புறந்தடு பட்டார்!
தங்கச்சி களத்தினில்
மாண்டானாம்... தமிழ்மேனி
கொதிக்குதம்மா!
பெண்ணென்றால் மண்வாழ்வாள்
எனும் கொள்கை பெயர்த்தவள்
பெண் போராளி
குண்டேந்திக் களம் நின்று
தமிழ்மண்ணில் முதற்சாவு
கண்ட கோதை
எண்டிசை பெண்வீரம்
எழுதின்ற எரிமலைப்
பெண் பிறப்பு
வண்டமிழ் சாமண்
வரலாற்றில் அழியாத
வரியாய் ஆனாள்...

தமிழீழ விடுதலைக் களத்தில் வீரச் சாவு கண்ட முதல் பெண் விடுதலைப் புலி மாலதி. 10-10-1987 இல் இந்தியப் படையுடன் நடந்த மோதலில் 'சயனைட்' நஞ்சை உண்டு தற்கொடையாக தன் உயிரைத் தந்து முதலாவது பெண் மாவீரரானாள்.

மாவீர் வீதி திறப்பு

கல்லாவி பகுதியில் வீரச் சாவடைந்த மாவீர்களின் நினைவாக வீதி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த வீதியினை திரு. யோகரத்தினம் யோகி அவர்கள் திறந்து வைத்தார்.

இந் நிகழ்ச்சியை வன்னி மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

மாவீர்களின் உருவப் படங்களை மாவீர்களின் பெற்றோர் திரை நீக்கம் செய்து வைத்தனர். விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாவீர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதனைவடுத்து இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. யோகி, திரு. பரா, திரு. வாஞ்சிநாதன், திரு. இளம்பரிதி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அன்னையர் வேங்கைகள் நினைவு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மனத்தில் திடம் இருந்தால்
மரணத்தை வென்றிடலாம்
மானத்தைக் கடைப்பிடித்தால்
மனிதனாய் வாழ்ந்திடலாம்
விழிக்குள் இருந்து விட்டால்
விதியினை மாற்றிடலாம்
விரத்தை பெற்றுவிட்டால்
தேசத்தை படைத்திடலாம்

மலராகும் முன்பே சருகாவதோ--ஈழம்
மலராது நாமும் உயிர் வாழ்வதோ
வளமான நாடு எமதாகிடும்--உங்கள்
வரி வேங்கை வீரம் நிலையாகிடும்
மாவீரரே....

மாவீரர்.

தேச விடுதலைக்காகத் தன்னை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரி பாசறையை
வெடிகுண்டு வெறியாடு தகர்த்தும்
சத்திய வேள்வியில் சித்தமும் கெட்
கொடுமை மறுத்திட உயிரினை சுமந்து
உடலை உரமிட்டு செங்குருதியால்
வரலாறு படைத்து தமிழீழ மண்ணெங்கும்
நினைவுச் சிலைகளாய் ஒளியாய்
வென்ன மலரேந்தி வேதங்களாய்
சமுமண்ணில் புது விதையாய்
விடுதலையின் தீக்கனலாகி
தேசமெங்கும் சோதியாய் நிறைவரே
மாவீரர்களாகி.





தமிழீழ விடுதலைக்கரப்பகம்
Tamileelam Archive

மிடி

காற்றை எதிர்த்துக் கொண்டு சைக்கிளை மிதிப்பது பெரும் சங்கடமாக இருந்தது. 'என்ன செய்வது எங்கட காலம் இப்படி இருக்கு' என மனம் சலித்துக் கொண்டான் கந்தசாமி.

கால்கள் இரண்டும் பயங்கரமாக வலித்தன. நெஞ்சில் கூட விபரிக்கமுடியாத ஒருவகை வேதனை பரவியது. வியர்வையில் குளித்திருந்த உடம்பு படபடத்தது.

கூதல் காற்று சில்லென்று வீசியது. அடிவானத்தில் சூரியன் சரிந்துகொண்டிருக்க, மெல்லக் குட்டிண் ஊடே பனி இறங்க ஆரம்பித்திருந்தது.

நேரம் ஆறு மணி அல்லது ஆறரையாக இருக்கலாம். மாரிகாலத்து தமுல் இருளை விழுங்கிக் கொண்டு வந்துவிட்டது.

பெரும் மலையென சைக்கிளின் பின்புறம் களக்கும் சுமை. அவன் களைத்துப் போனதால் முன்பைவிட அதிகமாக வருத்தியது.

எத்தனை நாட்களாக இந்த ஓட்டம் நடக்கிறது. பொழுது புலரும் பொழுதில் வெறும் வயிறு கர்புர் என சத்தமிடப் புறப்பட்டுப் போவதும் பின்னர் சுமையோடு திரும்பி வருவதும், வழக்கமாகி விட்டது.

சாவகச்சேரி, கொடிகாமம், பளை என்று எத்தனை இடங்களுக்கு மாறி மாறி ஓடி வீதிகள் ஒழுங்கைகள் என்று நடவித்த டவி.

விறகாக, தென்னை பனை மட்டைகளாக, பொக்க மட்டைகளாக, தேங்காய்களாக சுமை ஏற்றி ஓடாத ஓட்டம் ஓடி கோப்பாய் வெளி தாண்டி, மருதனாமடச் சந்தி, கண்ணாகம் மல்லாகம் வரை வர வேண்டும்.

மத்தியான வெய்யில் உடம்பைப் பொசுக்கும் நேரத்தில், சுமைகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டால் பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு உணவுக்கப்பல்கள் வருவதுபோல எப்போதாவது தான் வரும் வழியில் வியாபாரம் நடக்கும். மற்றப்படி மருதனாமடம் சந்தி வரை வியாபாரம் நடக்காது.

ஒரு நாள் முழுக்க சைக்கிள் அடிப்பதன் பலன் அன்றைய விற்பனையில்தான் தங்கியிருக்கும். அதன்பின்னர் ஏதாவது வயிற்றுக்குக் கிடைக்கும்.

ஒரு வடையும் கடித்து, தேனீரும் குடித்து, பீடியும் வாங்கி புகைத்துக் கொண்டு வீதியோரத்து மரநிழலில் ஆறி இருக்கும்போது சற்று ஆறுதலாக இருக்கும். பிறகு மீண்டும் பயணம் தொடரும் திரும்பக் கால்கள் வலிக்கும்.

. . .

இப்போது போலத்தான் இருக்கின்றது என்றாலும் ஒன்றரை வருடங்கள் ஓடிவிட்டன. நெடுநாள் குடியிருந்த சொந்த இடத்தைவிட்டு வெளியேறி.

மல்லாகத்தில் விரிந்து பரந்த அந்த வளவுக்குள் மொட்டையாகிப் போய்விட்ட தென்னை மரங்களின் மத்தியில் சின்னப்பிள்ளைகள் விளையாட்டுக்குக் கட்டும் சின்னஞ்சிறு குடிசைகளில் குடியிருந்தார்கள். தலையைத் தட்டும் கூரை, சிறு மழைக்கே பயப்படும் ஓலைத் தட்டிகள் கொண்ட நெருக்கமான குடிசைகள். மிகமிக அதிகமான மனிதர்கள் நெருங்கிய மனங்களும்

அவன் குடும்பத்தைப் போல எத்தனையோ குடும்பங்கள் எல்லை வேலி சரித்துக் வாள்வெட்டுக்குப் போனவர்களின் பரம்பரை

வினர் எல்லாம் ஒரே வளவிற்குள் எப்போதாவது சிறு சிறு சண்டை பிடித்தாலும் குடியிருந்தார்கள்.

அந்த வளவில் முன்பு இந்திய இராணுவம் குடியிருந்த ஒரு பெரிய வீடு இருந்தது. ஆனால் கூரையும் சில பக்கத்து சுவர்களும் இந்திய இராணுவம் திரும்பிப் போனபோது போய்விட்டன.

அவர்கள் துறையாடிய அமைதியோடு, வளவின் பசுமையும் போயிருக்க வேண்டும். எத்தனையோ பெரிய மரங்கள் அடியோடு தறிக்கப்பட்ட அடையாளங்கள் மாத்திரம் இருந்தன.

சொந்த இடத்தைவிட்டு ஓடிவந்து முதலில் பள்ளிக்கூடத்தில் தான் இருந்தார்கள். பிறகு தான் இங்கே குடிசைகள் போட்டுக் குடியேறினார்கள்.

எல்லாக் குடும்பங்களும் இப்படியே. நிவாரணத்தையும் சைக்கிளில் மூட்டை கட்டி வியாபாரம் செய்து கிடைக்கும் வருமானத்தில்தான் சீவியம் நடத்தினர்.

ஆனால் இப்போது எல்லாமே குழம்பிப் போய் விட்டன. வீடு சோலையான வளவு, ஆலமரத்தடி, அந்த சந்தோசம் எல்லாமே அந்நியமாகிப் போய்விட்டன. நாளாந்தம் பார்த்துவந்த தொழிலும் போய், போட்ட உடுப்புக்கு மாற்று உடுப்புக்கூட கனவாகிவிட்டது.

. . .

இன்றைய கெடுகாலம் எதுவுமே நேரகாலத்திற்கு சரிவரவில்லை. கொள்வனவு முடியவே நேரமாகிவிட்டது. புறப்படவே மூன்று மணியாகி -வழியில் பிரச்சினை.

இரண்டு தடவை சைக்கிள் காற்றுப் போய்விட்டது. ரயர் ஒட்டுக்கு 20 ரூபா கலப்பமாய்ச் செலவழிந்தது. கையில் ஒரு சதமும் இல்லாத நிலையில் புறப்பட்டு கோப்பாய் வெளி தாண்டவே இருள ஆரம்பித்துவிட்டது.

இன்றைய வியாபாரம் அதோ கதிதான் என்பது அப்போதே தெரியும். பொழுது படத் தொடங்கிவிட்டால் விற்பனை நடக்காது.

கந்தசாமியின் சிறு வீடு ஆலமரத்திற்கு முன்னால் இருந்தது. ஆலமரத்திற்குப் பக்கத்தில் ஒரு வாசிகசாலை. எந்த நேரமும் அந்த இடத்தில் ஊர் ஆட்களின் அமர்க்களமும் இருக்கும். மாலை நேரங்களில் இன்னும் மும்முரமாக இருக்கும்.

ஓலைக் கூரையும் சீமெந்துக் கற்களுமாக சோலையான வளவுமாக அமைந்ததுமான தமுல் பொழுது மங்கும் நேரம் வேலையை முடித்துக் கொண்டு வந்து களைப்புத்தீர குளித்து விட்டு திண்ணையில் சரிந்திருக்கும்போது எவ்வளவோ சந்தோசமாக இருக்கும்.

நாங்கு நாட்களுக்கு முதல் எடுத்த நிவாரணப் பொருட்கள் தேறவுக்கே முடிந்துவிட்டன. மத்தியானச் சாப்பாடு ஏதோ ஒருவிதத்தில் முடிந்திருக்கும். இரவுச் சாப்பாடு விடுகிறதுதான் முடிவாகும்.

நினைத்துப் பார்க்க எரிச்சலாக இருந்தது. அன்று முழுவதற்குமாக குடித்த தேனீர் எந்த மூலைக்கு காணும். என்ன செய்வது. கொண்டு வந்தவற்றை அறியாய விலைக்கு விற்க முடியாது. இரவுப் பொழுதை எப்படியும் சமாளிக்கத் தான் வேணும் எனவும் நினைத்தான்.

ஊர்வலம் போன மாதிரி சைக்கிள்கள் போய்க் கொண்டிருந்தன. மருதனாமடச் சந்திக்கு வந்தபோது இருள் கனத்திருந்தது.

சந்தியில் பெற்றோல்மாக்ஸ் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. ஆட்கள் பலபேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இளைஞர்கள், வயதானவர்கள் என்று சிலர் கிடங்கு கிண்டிக்கொண்டிருக்க, வேறு சிலர் மாட்டுவண்டில்களில் இருந்து மரங்களை இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

பள்ளிக்கூட கவர்களில் மாவிரர்களாகிவிட்ட சில போராளிகளின் பெரிய படங்கள் சாத்தி வைக்கப்பட்டிருந்தன.

வரும் வழிகளில் எல்லாம் இவ்வாறு சந்திக்கு சந்திகளும் இடைஇடையும் சனங்கள் வேலை செய்து கொண்டிருப்பதையும், பந்தல்கள், வளைவுகள் அமைத்துக் கொண்டிருப்பதைக் கண்டாலும் கந்தசாமியின் மனநிலை காரணமாக அவற்றில் அதிக அக்கறை காட்டவில்லை.

. . .

ஓலைக் குடிசைகளால் நிரம்பி வழிந்த அந்த வளவுக்கு முன்னால் சைக்கிளை நிறுத்தினான் கந்தசாமி. அந்த இருளிலும் பொழுது போகாத சிறுவர் சிறுமியர் விளையாடிக் கொண்டிருந்தனர். பக்கத்தில் இருந்த அச்சுக்கத்தில் இயந்திரம் இயங்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. மின்சாரம் இல்லாவிடினும் அங்கு சைக்கிளை மிதித்து இயந்திரம் இயக்குவது அவனுக்குத் தெரியும். மண்ணெண்ணெயில் மோட்டார் சைக்கிள் இயங்குவது போலத்தான் இதுவும்.

போராட்டக் காலச்சுழல் எத்தனை புதிய வழிமுறைகளை வெல்லாம் கண்டுபிடிக்க வைத்துவிட்டது என நினைத்தான்.

வேலிக் கரையோரம் பல பேர் குத்தியிருந்து பீடி புகைத்துக் கொண்டிருக்க சற்றுத் தூரத்தில் அரச மரத்தடியில் அமளியான வேலை நடந்து கொண்டிருந்தது. மாவிரர் வளைவொன்று தயாராகிறது போலும்.

சுமையோடு சைக்கிளை உருட்டி சிரமமாக இருந்தது. என்றாலும் தன் குடிசைக்கு முன்னால் போய் சைக்கிளை நிறுத்தினான்.

அந்தச் சின்னக் குடிசையின் வாசல் ஓரமாக மிதுக் மிதுக் என்று கட்டிவிளக்கொன்று எரிந்துகொண்டிருந்தது.

எதிரே சாக்கொன்றில் மூத்த பிள்ளையும் அதற்கடுத்த பிள்ளையும் படுத்திருந்தனர்.

'ஐயாப்பா' என்று குரல் கொடுக்க இடுப்பில் கடைசிப் பிள்ளையைச் சுமந்துகொண்டு அவன் மனைவி வெளியேட்டான் வெற்றுடம்புடன் காணப்பட்ட குழந்தையின் மூக்கு ஒழுகிக் கொண்டிருந்தது.

இருளிலும் அவனை அடையாளம் கண்டு 'ஐப்பா' என்று மழலை மொழி பேசியபடி அவனிடம் பாய முற்பட்டது கந்தசாமி சைக்கிளை ஸ்ராண்டில் நிறுத்தினான்.

சைக்கிளில் உள்ள சுமை, அவன் வந்த நேரம், போன்றவற்றை வைத்துக்கொண்டு அவனது நிலைமையினை உணர்ந்து கொண்ட அவன் மனைவி.

'நல்லாய்க் களைத்துப் போனான் அடுப்பில கடுதண்ணி இருக்கு தேத்தண்ணி கொண்டு வாறன் இருங்கோ' என்று சொல்லி பிள்ளையை அவனிடம் கொடுத்துவிட்டு உள்ளே போனாள்.

அவன் படுத்திருந்த பிள்ளைகளுக்கும் பக்கத்தில் இருந்தான். சற்று ஆறுதலாக இருந்தது. என்றாலும் மனம் ஒருநிலையில் இல்லை.

தேனீருடன் மனைவி வந்தாள்.

'முகத்தைக் கழுவிக் கொண்டு வாங்கோ. கஞ்சி காய்ச்சி வைச்சிருக்கு' என்றாள் ஆதரவாக.

தன் நிலையை உணர்ந்து கொண்டு கேள்விக் கணைகள் தொடுக்காமலே செயற்படும் அவளை அன்புடன் அவன் நோக்கினான். உடலில் தெம்பு பிறந்திருந்தது.

அவன் கையில் சீனி வாங்கி நக்கித் தேனீர் குடிக்கும்போது

'ஐயாப்பா உங்கை ஒரு மாவிரர் வளைவு கட்டினம். எல்லா ஆம்பிளையளும் அங்கைதான் போட்டினம். வேலை செய்ய நீங்களும் போட்டு வாங்கோவன். உடம்பு அலுப்பெண்டாலும் நாங்களும் செய்யத் தானே வேணும்' என்றாள் அவள்.

அவன் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான்.

'உடல் களைத்தாலும் மனம் களைக்கக் கூடாது' என்று நினைத்தபடி எழும்பினான்.

'சிவப்புச் சாறி ஒண்டும் கேட்டவை என்னட்ட. எங்கை கிடக்கு மரவக்கா தாறதெண்டவ. அதோட வஞ்சன் சாறியையும் சேர்த்து வாங்குங்கோ' என்றான் அவன் ■

நாளொன்றிற்கு ஒரு குழந்தை வீதம் மரணம்

யாழ் குடாநாட்டுக்குள் எண்ணிலடங்காது வாந்திபேதி, வயிற்றோட்டம், மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவி வருவதாக வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நாளொன்றிற்கு ஒரு குழந்தை வீதம் வயிற்றோட்ட நோயினால் இறந்து கொண்டிருப்பதாக யாழ் போதனா வைத்தியசாலை பதில்வியாதிகள் தெரிவிக்கின்றன. பண்டிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளே தொற்று நோய் தாக்கத்திற்கு அதிகமாக இலக்காகி வருகின்றன.

யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கணேசலிங்கம் கற்றாடல் மற்றும் சுகாதாரமின்மை மாகப் பரவிய மலேரியா புற்றுநோய் தொழுநோய் போன்றவை அதிகரிப்பதற்குக் காரணமாக உள்ளது எனக் கூறியுள்ளார். இன்னமும் உலக மகாயுத்த நேரத்தில் இத்தகைய நோய்கள் குண்டு வீச்சுகளால் அதிகளவு பரவியதை எடுத்துக்காட்டியுள்ள அவர் குண்டுவீச்சுக்களின்போது ஏற்படும் இரசாயன மாற்றங்களும், எரிகின்ற நெருப்பில் பல வகையான பொருட்கள் உருகி வெளிவரும் நச்சு வாயுக்களும் தொற்றுநோய்களை ஊக்கப்படுத்துகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

மாவீரனின் கொடியிது தமிழீழத் தேசிய கொடியிது

தேசியக் கொடி

ஒரு நாட்டின் தேசிய இனங்கள், நாட்டு மக்களின் பண்புகள், ஆட்சி, இறைமை என்பவை உட்பட அந்த நாட்டைக் குறிகின்ற ஒட்டு மொத்தமான பொதுச்சின்னமாக தேசியக் கொடி விளங்குகிறது. ஒவ்வொரு நாட்டின் இயல்புகள், நிலைமைகள், எண்ணங்களின் வெளிப்பாடாக அவ்வவ் நாட்டு தேசியக் கொடிகளின் சின்னம், நிறம், அளவு என்பன வேறுபட்டிருக்கும். தேசியக் கொடியின் அளவு பெரும்பாலும் 3:2 என்ற அளவினதாகவே இருக்கின்றது. சில நாடுகளின் தேசியக் கொடிகள் 2:1, 1:1 என்ற அளவினைக் கொண்டதாகவும் இருக்கின்றது.

நாட்டைப் போற்றி வணங்குதற்கடாக தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்தப்படுகிறது. தேசியக் கொடியை வணங்குவது நாட்டை வணங்குவது போலாகும்.

நாட்டின் தலைவர், படை, ஆட்சி என்பவற்றைவிடவும் உயர்ந்ததாக தேசியக்கொடி மதிக்கப்படுகிறது. எவ்வேதான் ஒரு நாட்டின் எந்தவொரு சிறப்பு நிகழ்வுகளின் போதும் நாட்டின் தலைவர், படை, அரசப்பணியாளர் அனைவரும் தேசியக் கொடி வணக்கம் செய்கின்றனர்.

தேசியக்கொடிக்கு வழங்கப்படும் மதிப்பு, சிறப்பு என்பன அந்த நாட்டைச் சென்றடைவதுபோல் தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு புறக்கணிப்பு என்பனவும் அதன் நாட்டையே சென்றடையும். எவ்வேதான் தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு பெரும் குற்றமாகக் கருதப்பட்டு அக்குற்றத்திற்கு மிகுதியான ஒறுப்பு (தண்டனை) வழங்கப்படுகிறது.

தேசியக் கொடிக்கு செலுத்துகின்ற கொடி வணக்கம் நிகழ்வுக்கு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சீரான ஒழுங்குமுறை வரையறுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது. கொடியேற்றம், கொடிவணக்கம் என்பவற்றிற்கான ஒழுங்குமுறை, நடைமுறை நாட்டுக்கு நாடு வேறுபட்ட முறையில் அமைத்திருக்கும். அந்த வரையறுக்கப்பட்ட ஒழுங்குமுறையை மீறுவதும் தேசியக் கொடிக்கு இழைக்கப்படுகின்ற இழிவாகவே கொள்ளப்படும்.

சிறப்பு நிகழ்வுகளுக்கான ஊர்வலங்களின் போது தேசியக் கொடியை ஏந்திச் செல்வதும், ஏந்தி நிற்பதும் கூட கொடிக்குச் செலுத்துகின்ற மதிப்பு வணக்கமாகும். தேசியக் கொடி ஏற்றுபவர்களும், கொடிக்கம்பத்தைக் காப்பவர்களும் தேசியக் கொடி சிதைவோ கொடிக்கம்பம் சரிவோ இடமளிக்கமாட்டார்கள்.

கொடியேற்றுபவர்கள் தேசிய கொடியேற்ற நிகழ்வின்போது உயிர்போகின்ற நிலைவரினும் கொடியைக் கைவிடாத தன்மையைக் கொண்டிருப்பர். தாம் ஏந்துகின்ற கொடி சரிந்தாலோ, கீழே விழுந்தாலோ அது தமது நாட்டிற்கு இழுக்காக, தமது நாட்டின் ஆட்சி வீழ்ந்ததாக கொள்ளப்படும் என்ற உணர்வு அவர்களிடம் இருக்கும்.

தலைவர்கள், சிறப்புக்குடிமக்கள் போன்றோரின் மறைவையொட்டி ஏற்படும் நாட்டின் துயர நிகழ்வுகளின்போது தேசியக்கொடி கொடிக்கம்பத்தின் உச்சிவரை ஏற்றப்பட்டு கொடிக்கம்பத்தின் நடுப்பகுதிவரை இறக்கிக்கட்டிப் பறக்கவிடப்படுவது வழக்கம். இதன்மூலம் நாட்டின் துயரம் உணர்த்தப்படுகின்றது.

கொடிக்கம்பத்தின் நுனியிலே பறக்கின்ற கொடி நடுக்கம்பம் வரை இறக்கப்பட்டு அரைக்கம்பத்தில் பறப்பதே நாட்டின் மிகுதுயரை உணர்த்துவதாயின் தேசியக்கொடி சிதைவுறுவதோ, கீழே வீழ்த்தப்படுவதோ, இழிவுபடுத்தப்படுவதோ, வீசப்படுவதோ, கால்களில் மிதிப்படுவதோ எண்ணிப்பார்க்க முடியாத நிலையாகும்.

தமிழீழ தேசியக் கொடி

1977 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்துவரும் புலிக்கொடியில் உள்ள எழுத்துக்கள் நீக்கப்பட்டு தமிழீழத்தின் தேசியக் கொடியாக 19-90 ஆம் ஆண்டு மாவீரர் நாளிலிருந்து (27-11-1990) அறிவிக்கப்பட்டு அன்றுமுதல் தமிழீழத்தில் தேசியக் கொடியாக இருந்துவருகிறது.

எமது தேசியக் கொடியை மூன்று நிறங்கள் அலங்கரிக்கின்றன. மஞ்சள், சிவப்பு, கறுப்பு ஆகியன அந்நிறங்கள். தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு. அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை. தமிழீழமக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி (சுயநிர்ணய) உரிமை உண்டு. இந்த தன்னாட்சி உரிமை அவர்களது அடிப்படை அரசியல் உரிமை. தமது தாயகத்தை மீட்டெடுத்து தன்னாட்சி உரிமையை நிலைநாட்டுவதற்கு தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின் பாற்பட்டது. மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது.

தேசிய சுதந்திரம் பெற்று தமிழீழ தனியரசை அமைத்து விட்டாற் போல நாம் முழுமையாக விடுதலை பெற்றதாகக் கொள்ள முடியாது. தமிழீழ சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். வர்க்க சாதிய முரண்பாடுகள் அகற்றப்பட வேண்டும். பெண் அடிமைத்தனம் நீக்கப்பட வேண்டும். இதற்கு சமுதாய அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். சாதி துவமும், சமதர்மமும், சமூக நீதியும் நிலை நாட்டப்பட வேண்டும். இப்படியான புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை வேண்டி, எமது அரசியல் இலட்சியத்தை சிவப்பு நிறம் குறிப்பிடுகிறது.

விடுதலைப் பாதை கரடுமுரடானது சாதம், அதிலும் தாம் கொண்ட துன்பங்களும் நினைத்தது இத்தலையையும் தாங்கிக் கொள்ள இரும்பு போன்ற இதயம் வேண்டும். அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். என்றும் உளராத உறுதி வேண்டும் என்பதை கறுப்பு நிறம் குறிப்பிடுகிறது.

கொடி வணக்க ஒழுங்கு முறை

தேசியக் கொடி ஏற்றப்படும் கொடிக்கம்பத்தின் உயரம் 22 அடிக்கு குறைவாக இருக்கக் கூடாது.

- தேசியக் கொடியின் அளவு 4 1/2' x 3' அளவாக இருத்தல் வேண்டும்.

தேசியக் கொடியுடன் வேறு கொடிகளும் ஏற்றப்படின் அக் கொடிகள் தேசியக் கொடியை விட பெரிதாக இருக்க கூடாது.

தேசியக் கொடி வேற்றப்பட்ட கொடிக்கம்பத்தைவிட ஏனைய கொடிக்கம்பங்கள் 2' உயரம் குறைந்ததாக இருக்கவேண்டும்.

தேசியக் கொடியுடன் பிறநாடுகளின் தேசியக் கொடி ஏற்றப்படுவதாயின் ஒரே அளவு உயரமுள்ள கொடிக்கம்பத்தில் ஒரே அளவாக கொடிகளை ஏற்றலாம். ஆனால் எமது தேசியக் கொடிக்கு இடப்புறமாகவே ஏனைய நாட்டின் கொடிகள் பறக்கவிடப்பட வேண்டும்.

எமது தேசியக் கொடியுடன் பிறநாட்டுத் தேசியக் கொடிகளை ஏற்றுவதாயின் எமது தேசியக் கொடி ஏற்றப்பட்ட பின்பே ஏனைய தேசியக் கொடிகள் ஏற்றப்பட வேண்டும்.

கொடிகள் இறக்கப்படும்போது ஏனைய கொடிகள் முதலில் இறக்கப்பட வேண்டும் பின்பு இறுதியாகவே எமது தேசியக் கொடி இறக்கப்பட வேண்டும். ஏனைய கொடிகள் பறந்து கொண்டிருக்கும்போது எமது தேசியக் கொடியை ஒருபோதும் இறக்கக்கூடாது.

ஊர்வலங்களில் தேசியக் கொடியை எடுத்துச் செல்வதாயின் கொடியின் உயரத்தின் 4 பங்கு உயரமான கம்பத்தில் கட்டி நெஞ்சுக்கு நேராகவோ அன்றி வலத் தோளிலோ ஏந்திச் செல்ல வேண்டும். தேசியக் கொடி ஏந்திச் செல்பவருக்கு முன்பு வேறு எந்தக் கொடியை ஏந்துபவரும் முந்திச் செல்லக் கூடாது.

கூட்ட மேடைகளில் பேச்சாளரின் தலைக்கு மேலாக பின்புறத் தட்டியில் தேசியக் கொடியைக் கட்டலாம்.

தேசியக் கொடியில் எதுவும் எழுதப்பட்டிருக்கக் கூடாது.

தேசியக் கொடி கிழிந்தோ, சிதைந்தோ போனால் அதைப் பழுதுணியாகப் பயன்படுத்தவோ, குப்பைத் தொட்டியில் வீசவோ கூடாது.

தேசியக்கொடி வணிக விளம்பரத்திற்கோ, விரிப்பாகவோ, அல்லது மேலெழுந்த தேவைகளுக்காவோ பயன்படுத்தக் கூடாது.

குறிப்பிட்ட சில உயர் அரசபணிகக் கட்டிடங்களில் மட்டும் தேசியக் கொடி கொடிக்கம்பத்தில் ஏற்றப்படலாம்.

கட்டிடங்களில் கொடிக்கம்பத்தில் ஏற்றப்படும் தேசியக்கொடி நாள்தோறும் சுதிரவன் எழுந்த தற்காலையில் ஏற்றப்பட்டு மறைவதற்கு முன்பாக இறக்கப்பட வேண்டும்.

ஆட்சி பொறுப்பிலுள்ளோர், தலைவர்கள், உயர் அலுவலர்கள் விடுமுறை எந்நாளும் பகலில் தேசியக் கொடி பறக்கவிடப்படலாம்.

நாட்டின் எல்லைப்புற பகுதியில் குறிப்பிட்ட சில பொது இடங்களிலும், தேசியக்கொடி நாள்தோறும் பறக்கவிடப்படலாம்.

வெளிநாட்டிலுள்ள எமது பணியகங்களிலும், தூதரகங்களிலும் பகலில் எந்நாளும் எமது தேசியக் கொடி பறக்கவிடப்படலாம்.

குறிப்பிட்ட சில நாட்களில் மட்டும் பொதுமக்கள் வீடுகளில், கட்டிடங்களில் தேசியக்கொடி பறக்கவிடப்படலாம். இவை முறையாக கம்பங்களில் மட்டுமே ஏற்றப்பட வேண்டும்.

தெருவுக்குக் குறுக்காகவோ பக்கமாகவோ கயிறுகளில் தேசியக் கொடி தொங்கவிடப்படக்கூடாது.

தேசியக்கொடியை தலைகீழாகப் பறக்கவிடக்கூடாது. தேசியக் கொடியிலுள்ள புலி கொடிக்கம்பத்தைப் பார்த்தவாறு பறக்கவிடக்கூடாது. புலியின் பார்வை கொடிக்கம்பத்திற்கு எதிர்மறுமாக கொடி பறக்கும் பக்கமாக இருக்கும் வகையில் கொடி பறக்கவிடப்பட வேண்டும்.

தேசியக்கொடியை கீழிருந்து பறந்துகொண்டிருக்கும் நிலையிலேயே ஏற்றவேண்டும். வந்தபடியே ஏற்றி அங்கிருந்து விரிந்து பறக்கும் வகையில் தேசியக் கொடியை ஏற்றுதல் கூடாது.

தேசியக் கொடியை ஏற்றுபவர்கள் கொடி வணக்கம் செலுத்த அணியாகத் திரும்பி மக்களுக்கும், கொடிக்கம்பத்துக்கும் இடையில் நின்று கொடியை ஏற்றுதல் கூடாது.

தேசியக்கொடியை ஏற்றும்போது அனைவரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்துதல் வேண்டும்.

தேசியக் கொடியை ஏற்றப்படுவதுபோல இறக்கப்படுவதும் ஒழுங்கு முறையான சிறப்பு நிகழ்வாகவே இருக்க வேண்டும். கொடியை இறக்குபவரும் முதன்மையானவராக தகுதியானவராக இருத்தல் வேண்டும்.

தேசியக்கொடி இறக்கப்படும்போது நிலத்தில் விழாது எட்டக்கூடிய உயரத்திலேயே வைத்து கையில் ஏந்தி எடுத்தல் வேண்டும்.

தேசியக் கொடி இறக்கும் நிகழ்வின்போது வாயொலி எழுப்பக் கூடாது அந்நிகழ்வு அமைதியாக நடைபெற வேண்டும்.

தொடர்ச்சிகம் பக்கம் ....

Tamileelam Archive

ஒரு உணர்வு பூர்வமான ஒளியேற்று வைபவம்

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒளியேற்று வைபவத்தின் தொகுப்பு

மாவீரர் துயிலும் இல்லத்தில் நிகழ்ந்த அந்த நிகழ்ச்சி - மாவீரர் கடர் ஏற்றும் வைபவம் -அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களை -போராளிகளை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. எங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உணர்வுபூர்வமான கட்டம் இது. இவ்வாறாக இதை வர்ணித்தால் அந்த நிகழ்ச்சியைப் பார்த்த எவரும் மறுத்துக் கூறமாட்டார்கள்.

மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள அந்த மைதானத்திலுள் காலடி எடுத்து வைக்கிறோம். இருபக்கங்களிலும் போராளிகள் அணிவகுத்து நிற்கின்றார்கள். நடுவில் அணிவகுப்பு நிகழ்ச்சிக்கு தயாரான போராளிகளும் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்களும் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில் நிற்கின்றார்கள். அதேவேளை தங்கள், தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளுக்கு முன்னால் மாவீரரின் பெற்றோர் நிற்கின்றனர். அதுவும் ஒரு அணிவகுப்பாகவே காட்சியளித்தது. ஒலிபெருக்கி அறிவிப்பாளருக்கருகில் தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளை சரியாக இனங்காட்டுமாறு வேண்டி மாவீரரின் பெற்றோர்கள் நிற்கின்றனர். நேரம் 12 மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது ஒலிபெருக்கியில் ஒரு அறிவிப்பு "எமது மதிப்புக்குரிய மாவீரரின் பெற்றோரே! இந்த மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டுள்ள பிள்ளைகள் எல்லோரும் உங்கள் பிள்ளைகள்தான். எனவே தற்போது தங்கள் தங்கள் பிள்ளைகளின் கல்லறைகளைச் சரியாக இனங்காண முடியாத பெற்றோர் இங்கேயுள்ள ஏதாவது ஒரு கல்லறையில் மாவீரர் கடரை ஏற்றுங்கள். அது உங்கள் பிள்ளைகளின் கல்லறைக்கு கடரேற்றியதற்கு சமனாகும்" என்று கூறியதும், நேரம் நெருங்கிவிட்டதையும், அப்போதைய நிலைமையையும் உணர்ந்த அவர்கள் கலைந்து சென்றனர். பெற்றோர் சமூகமளித்திருக்காத மாவீரரின் கல்லறைகளுக்கு முன்னால் போய் நின்றனர். அக்கணத்தில் அந்த மாவீரரையும் தங்கள் பிள்ளைகளாக தத்தெடுத்துக் கொண்டனர்.

போராளிகள், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் ஆகியோரின் அணிவகுப்பு வந்துகொண்டிருந்தது. அப்பிரதேசமே மௌனமாகியது. இக்காட்சி விடுதலை பெற்ற நாடுகளின் கதந்திரதின அணிவகுப்பை ஒத்திருந்தது. ஏன் அதைவிட மேலாக அமைந்திருந்தது எனலாம். அங்கு நடைபெறுபவை சம்பிரதாய பூர்வமானவை. ஆனால் இது அப்படியல்ல.

சரியாக 12 மணிக்கு மாவீரர் துயிலும் இல்லத்தினுள் அமைக்கப்பட்டிருந்த மணியில் ஒலி ஒழுப்பப்பட்டது. அக்கணத்தில் சுற்றுப்புறமெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தது. நமதுவுள்ள ஆலயங்களிலிருந்து ஒலிக்கப்பட்ட மணியோசை மட்டும் தான். போராளிகளும் பொதுமக்களும் சிரம் தாழ்த்தி அஞ்சலி செலுத்தி கொண்டிருந்தனர். 12.02க்கு மணியோசை நின்றதும் விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு.கோ.மகேந்திரராசா முதலாவது கடரை ஏற்றினார். அதன்பின் மாவீரரின் பெற்றோர் மாவீரர் கடரை ஏற்றினர். போராளிகளும் மாவீரர் கடரை ஏற்றினர். அவர்களிலும் பலர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா? மாவீரர் கடர் ஏற்றும்போது எல்லாப் பெற்றோருமே அழுதுவிட்டனர். சிலர் கல்லறைக்கு மேலேயே விழுந்து அழுதுகொண்டிருந்தனர். 'என்ற ராசா' -அண்ணா - அக்கா, அக்கா' என்று குரல்கள் கேட்டுக்கொண்டேயிருந்தன. அப்போது 'கண்வழி கங்கைகள் பாயும்...' என்ற கீதத்தின் ஒலி வாத்தியத்தில் கேட்டது. எங்கும் தீப ஒளி. அது இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தது. அந்தளவிற்கு வெளிச்சம் மிக அழகாக இருக்கிறது என்று ஒருகணம் சிந்தனை -உடனே இத்தனை கடர்கள் -இத்தனை போராளிகளை நாம் இழந்திருக்கிறோம் என்ற கசப்பான உண்மை மனத்தில் முள்ளாய்த் தைத்தது. 'புதைந்த குழியில் இருந்து நீங்கள் எழுந்து வாருங்கள்' என்று அனைவரும் மனதார வேண்டிக் கொண்டோம்.

அழுதுகொண்டிருந்த ஒரு தாய் மயங்கிவிழுந்தார். முதலுதவிச் சிகிச்சைப் பிரிவினர் உடனடியாக அவரைக் கொண்டு சென்றனர். போராளிகள் தரப்பில் ஒரே மௌனம். 'மரணித்த வீரனே உன் சீருடைகளை எனக்குத் தா...' என்ற வாத்திய ஒலி அவர்களைச் செயலிழக்கச் செய்துவிட்டது. சில வினாடிகளின் பின், மக்கள் உறவு கொள்ளக முன்னெடுப்புப் பிரிவைச் சேர்ந்த அரசண்ணாவின் குரல் ஒலித்தது. ஒவ்வொரு வசனமும் நிதானித்து - நிதானித்து -அதைக் கேட்கும் போது மேலும் மேலும் உணர்ச்சிவசப்பட்டனர் மாவீரரின் பெற்றோர்.

சில நிமிட நேரத்தின்பின் மாவீரரின் பெற்றோர் அழைக்கப்பட்டனர். தாங்கள் கொண்டு வந்திருந்த மாலைகள், மலர்களால் மாவீரர்களின் கல்லறைகளில் அஞ்சலி செலுத்தினர் பெற்றோர். சிலர் மாவீரரின் பெயர் பொறிக்கப்பட்ட கருங்கல்லிலான நடுகைக் கல்லிலும் மலரஞ்சலி செலுத்தினர். பின்னர் கொஞ்சம், கொஞ்சமாக வெளியேறத் தொடங்கினர்.

மகனை இழந்த தாய்-தந்தையர், சகோதரரை இழந்தவர்கள் வரிசையாக வந்துகொண்டிருந்தனர். இவற்றிற்கு நடுவில் தங்கள் தந்தையை இழந்த குழந்தைகளும் வந்துகொண்டிருந்தனர். இவற்றிற்கு நடுவே தன் கணவனை இழந்த நாட்டிற்கு கொடுத்த பெண் - மேஜர் டயசின் மனைவியும் வந்து கொண்டிருந்தார். சுதந்திரத்திற்காக நாம் கொடுத்த விலையை எண்ணியவாறு திரும்பிப் பார்த்தபோது வரிசையாக எரிந்த தீபங்கள் தெரிந்தன. அன்று எங்கள் சத்தியநாதன் (சங்கர்) எம்மை விட்டுப் பிரிந்தபோது அவனது புகழுடலை தகனம் செய்வதற்கு பத்திற்கும் குறைவானவர்களே சென்றிருந்தனர். 'இன்று எங்கள் சொந்தங்கள் பெருகி விட்டன. அன்று அந்தவிடமணியில் இரகசியமாகவே அதைச் செய்ய வேண்டியிருந்தது. இன்று எம் சொந்த மண்ணில் தலை நிமிர்ந்தபடி நாம்....

'நாங்களும் மாவீரர் குடும்பம் தான்' என்று குறிப்பிட்டு விட்டு எம்முடன் உரையாடத் தொடங்கினார் ஒரு போராளி. அவரது சகோதரன் முல்லைத் தீவில் வீரமரணமெய்தியவர். 'போராளிகளாகிய எங்களாலேயே தாங்கமுடியாமலிருக்கு. பெற்றோரால எப்படி...' என்று கூறி நிறுத்தினார். அவரது நினைவுகளில் அவரோடு கூடப்பழகிய நண்பர்கள் அனைவரும் வந்திருக்க வேண்டும். இந்திய இராணுவத்தின் காலடிகள் 'எம்மண்ணை அகரித்துக் கொண்டிருந்த காலத்தில் வாழ்ப்பாணத்தில் எஞ்சிய போராளிகளில் அவரும் ஒருவர். 'நாளைக்கு ஆர் ஆர் உயிரோட இருக்கிறமோ தெரியாது. உயிரோடை இருக்கிறவை இதைச் செய்யுங்கோ என்று சொல்லிப்போட்டுத் தான் வெளியால வெளிக்கிடுவம்' என்று தனது அந்த நாளைய அனுபவங்களை எம்முடன் பகிர்ந்துகொண்டார். அவருக்கு அங்குள்ள ஒவ்வொரு தீபமும் நாளாந்தம் உதிர்ந்துகொண்டிருந்த தனது நண்பர்களை நினைவூட்டியிருக்கும்.

வாகனங்களில் பெற்றோர் ஏறிக்கொண்டிருந்தனர். ஒலிபெருக்கியில் 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்றே நீ கூறு [illegible] வீரர்கள் வாத்தியக் கருவிகளூடாக ஒலித்துக் கொண்டிருந்தது. அப்போது போராளிகள் தம் மனதில் எடுத்துக் கொண்டிருந்த சத்தியப் பிரமாணத்திற்கு இசைவாக.

நிகழ்வும் நினைவும்...

மொழி, கலை, பண்பாடு தொடர்பாக சமூகம் மிக மிக விழிப்படைந்தமையினை இன்றைய நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன. மொழியினைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளன. அடிமைப்பட்டிருந்த ஒரு சமூகம் விடுதலை வடைந்தபின் அடிமைவாழ்வினால் கலப்புற்றிருந்த தமது மொழியினைத் தூய்மைப்படுத்துவதனை உலகாவிய வரலாற்றில் காணமுடிகின்றது. உதாரணமாக நோர்வே. டென்மார்க்கின் ஆளுமைக்குட்பட்டிருந்த காலத்தில் மொழி ரீதியாகவும் டென்மார்க்கின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. அதன்பின் 1905 ஆண்டு கலைவிடமிருந்து நோர்வே தன்னை விடுவித்துக் கொண்ட பிறகு நோர்வேஜிய மொழியினை தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. இத்தூய்மையாக்கல் இன்று புதிய நோர்வேஜிய(NYNORSK) மொழியினை உருவாக்கியுள்ளது.

இதேபோல் இன்று விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே தமிழும் தனது மொழியினைத் தூய்மைப்படுத்த ஆரம்பித்துள்ளது. எமது தேசிய கலை வடிவங்கள் தொடர்பான புதிய சிந்தனைகளும் அவற்றிற்கான தேடல்களும் ஆரம்பித்தமை மட்டுமன்றி அவற்றிற்கான அங்கீகாரமும் கிடைக்க ஆரம்பித்துள்ளன.

ஆய்வுத் துறைகளில் தீவிர அக்கறையும் ஈடுபாடும் எழுந்துள்ளன. எதிரியின் பொருளாதாரத் தடையிலிருந்து விடுபடுவது தொடர்பாகவும் எதிர்காலத்தில் ஒரு தன்னிறைவு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பாகவும் எழுந்த விழிப்புணர்வு இன்று ஒரு ஆய்வு தொடர்பான அக்கறை கொண்ட சமூகம் ஒன்றினை உருவாக்கியுள்ளது.

எதிரியின் எமது பிரதேசத்திலிருந்து அகற்றுதல் என்பதோடு எமது சமூகத்துக்குள்ளும் இயலவில் சாதிக்கப்பட முடியாத பல மாற்றங்களை விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தி வருகின்றது. எதிரியின் கொடூரமான ஒடுக்குமுறைக்குள்ளும். இம்மாவீர்களின் அர்ப்பணிப்பும் வீறும் நிறைந்த செயற்பாடுகள் மூலம் ஒரு ஒளிமயமான எதிர்காலம் உள்ள ஒரு தேசம் எமக்காக உருவாகி வருகின்றது. சமத்துவம் மிக்க வாழல் அகன்று தேசம்பற்றுள்ள விஞ்ஞான தொழில் நுட்ப சமூக விஞ்ஞான ஆய்வு நோக்குக் கொண்ட அடிமைப்படாதிருந்த ஒரு புதிய சமூகத்தில் தமிழும் தலை நிமிர்வது நிச்சயம்!

(பக்கம் 9)

மாவீரரை வணங்குவது பண்டைத் தமிழர் மரபு

போர்க் களத்தில் வீழ்ந்தோரே வீரர் எனப்படுவர். போரில் வீழ்ந்த வீரரை வழிபடும் வழக்கம் மறுப்பண்டு படைத்த பண்டைத் தமிழர் மரபாக இருந்தது. இதுபற்றிச் சங்க நூல்களில் காணலாம். அறமும் மறமும் படைத்த வீரர்களால் போர்க் களத்தில் நிகழ்த்தப்பட்டதாக கருதப்படும் அந்த தன்மை வாய்ந்த நிலையான நிகழ்ச்சிகளைத் தாமும் பாவனை செய்து கொள்வது பண்டைத் தமிழர் பண்பாகும். இவை ஆடல்களாகவும் பாடல்களாகவும் வெளிவந்தன. இக்காரணங்களை நிகழ்த்துவதால் நிலையான சில விளைவுகள் மனித ஜுக்குச் சாதகமாக உண்டாவதாக நம்பப்பட்டது.

மாவீரர்களை வழிபடுவது பற்றி ஐங்குறு நூறு, பட்டினப்பாலை, அகநானூறு, புறநானூறு ஆகிய பண்டைத் தமிழ் நூல்களில் காணலாம். வீரர்களை வழிபடும் முறைகளை ஒழுங்குபடுத்தி அதற்குள்ள இலக்கணத்தையும் தொல்காப்பியர் வகுத்துள்ளார்.

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல் சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்றிரு மூன்று வகையிற் கல்லொடு'

- தொல் பொருள் 60-19-21

கல்லை நீராட்டி, வீரர்களின் நினைவாகக் கல்லை நட்டு அதற்கு வேண்டிய கட்டிடம் கட்டுவதும், வீரச் செயல்களைக் கல்லில் பதிப்பதும் வழிபடுவதும் வழக்கமாகும்.

வீரர்களின் பெயரையும், சிறப்பினையும் எழுதி மகிழ்தோகையால் அலங்கரிக்கப்பட்டதான நடுகல் பற்றி அகநானூறும், புறநானூறும் தெரிவிக்கின்றன. வீரர்களின் நினைவாகக் கற்கள் நாட்டப்பட்டு அவற்றின் அருகில் போராயுதங்கள் வைக்கப்பட்டன என்று பட்டினப்பாலை கூறும்.

'கிடுகுதிரைத் தெக்கன்றி
நடுகல்லி னரண்போல'
- பட்டினப் 78 - 79

மேலே கூறியவற்றிலிருந்து நியாக வேள்வியில் தெய்வக் உருவை

மாவீர்களின் அர்ப்பணிப்பினால் கட்டி வளர்க்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டம் எமது சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் சமூக மாறுதலில் கண்கூடாகத்தெரிகிறது. வாழ்வு ஆயுதங்களில் விடியல் காணும் நாள் இன்று குறிப்பிட்டுள்ளது. மிக மோசமாகத் வாழ்வான சில விடயங்கள் மட்டுமே. எமது மாவீர்களின் சாதனையை ஒரு ஒழுங்கு முறைக்குட்பட்ட ஆய்வுக்குட்படுத்தி அதனை சரிவரச் அங்கீகரிக்கப்படுவது விரத்தில் வெளிப்படுத்தும் பணி எமது சமூக விஞ்ஞானிகளிடம் உள்ளது. எமது சமூகத்தில் சமூக விஞ்ஞானங்கள் என்று கூறக்கூடியவைக்கு மிக மிகக் குறைந்த எண்ணிக்கையினை உடைய அறிவு ஜீவிகளுக்கு முன் இப்பணி காத்திருக்கின்றது.

நன்றி தெரிவிப்பு

வாழ் மாநகர சபையினால் குருநகர் சனசமூக நிலையக் கற்றாடலில் குழாய்க் கிணறு அமைத்து மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தமைக்காக வாழ் மாநகரசபை ஆணையாளருக்கும் நீர்வளப் பகுதியினருக்கும் தொடர்பாடு மக்கள் நன்றியைச் செலுத்தியுள்ளனர்.

நிகழ்வும் நினைவும்

– தீபன் –

மாவீரரும் சமூக மாற்றமும்

மாவீரர் வாரத்தினை முன்னிட்டு, தமிழீழ விடுதலைக்காக தமது இனிய உயிர்களை ஈந்த மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் தமிழீழ மண்ணிலும் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் இடங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

இம்மாவீரர்களை நினைவு கூரும்போது, தமிழீழ விடுதலைப் போராட்டம் எமது சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கும், ஏற்படுத்திவரும் ஆரோக்கியமான மாற்றங்கள் குறித்த நினைவுகள் நெஞ்சிலே எழுந்தன.

எல்லாவற்றினையும் தம்முடையதாக்கிக் கொள்ளும் மனப்பாங்கில் வளர்ந்து வந்த தமிழர் சமுதாயத்தில், எமது எதிர்கால சந்ததியின் நல்வாழ்வுக்காகத் தமது நிகழ்கால வாழ்வினை அர்ப்பணித்திருக்கும் இம் மாவீரர்கள் வரலாறு, தமிழர் வரலாற்றில் புதிய அத்தியாயத்தினை எழுத ஆரம்பித்துள்ளது. 'கவலம் என்ற தனத்தினை விட்டு பொதுநலம்' என்ற தனத்திலிருந்து பிரச்சினைகளைப் பார்க்கவும், ஆராயவும் தேவையான மனப்பக்குவத்தினை இம்மாவீரர்களின் அர்ப்பணிப்புக்கள் எமக்கு அளித்துள்ளன.

விடுதலைப் போராட்டத்தில் அளப்பரிய சாதனைகளைப் புரிந்த இம்மாவீரர்களின் செயற்பாடுகள் எம் மண்ணில் எத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளன?

300 ஆண்டுகால அடிமை வாழ்வில் ஊறிப்போய், சுருங்கிக்குறுகி, அதிகாரத்திற்கு தலை வணங்கி, பதவிக்காகத் துரோகம் புரிந்து வந்த தமிழரின் அரசியல் வரலாற்றில், முதன் முதலில் பெரும் அழுத்தங்களையும் எதிர்த்து நின்று, சொந்தக் காலில் நின்று செயற்படும் ஒரு புதிய தலை முறை இம்மாவீரர்களினூடாக உருவாகியுள்ளது. இது வானொலியோ அல்லது எழுத்தினாலோ இலகுவில் வெளிப்படுத்தி விடவதினைப்போல் நடைமுறையில் இலகுவில் அடையக்கூடிய சாதனையல்ல. இது குறித்து தமிழிழப் பேராசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் "போராட்டம் தோன்றி வளர்ந்து என்பதனைவிட எமது சமூகத்திலிருந்து இப்படி ஒரு அர்ப்பணிப்பு மிக்க போராட்டம் தோன்றி வளர்ந்திருக்கின்றது என்பதே முக்கியமான விடயம்" எனக் குறிப்பிட்டிருந்தது இங்கு நினைவு கூரத்தக்கது.

எமக்குள், எம்மை அறியாமலேயே அடிமைத்தனம் ஒளிந்திருக்கிறது. இது மிக நீண்ட கால அடிமை வாழ்வினால் ஏற்பட்ட உளவியல் தாக்கத்தின் விளைவாகும். மேலதிகாரிகளுக்குப் 'பத்தம் பிடிப்பது, செல்வாக்குள்ளவர்களை நியாயமான காரணத்துக்காகவும் எதிர்க்கத் தயங்குவது, சொந்த நலன்களுக்காக பொதுநலன்களை மறப்பது போன்றவை நீண்ட காலமாக எமது அடிமைத்தனத்தின் வெளிப்பாடாக எமக்குள் ஊறிப்போயுள்ளன. இன்று புதிய தலைமுறை இவ் அடிமைத் தளையினை அறுத்தெறிந்து வளர்கின்றது அச்சம் என்னால் என்ன என்று தெரியாதவர்களாய் இம்மாவீரர்கள் புரிந்த சாதனைகள் எமக்கும் எமது அடிமைத் தனத்திலிருந்து விடுபட ஊக்கம் அளிக்கின்றது. இன்றைய புதிய தலைமுறை தொடர்பாக யாழ் பல்கலைக்கழகத்தின் உச்ச பொறுப்பிலுள்ள பேராசிரியர் ஒருவரோடு கலந்துரையாடியபோது அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"எங்களைப் போலவோ அல்லது உங்களைப் போலவோ அல்ல: உறுதியிக்க ஒரு புதிய தலைமுறை அங்கு உருவாகிக் கொண்டிருக்கின்றது".

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியினால் எம்மத்தியில் நிலவிய சமூக ஒடுக்குமுறையின் கொடூரம் குறைந்துள்ளது. சாதி ஒடுக்குமுறையினைப் பொறுத்தவரை, காலாதிகாலமாக எமது சமூகத்தில் 'பெருமை பேசும்' விடயமாக இருந்த சாதி அமைப்பு இன்று அவமானத்திற்குரியதாக மாறியிருக்கின்றது. இன்று சாதிப்பாகுபாடு பற்றி எவரும் வெளிப்படையாகப் பேசினால் அவர் பெரும் அவமதிப்புக்குள்ளாக்கப்படுவதனை அவதானிக்கின்றோம். சாதி குறித்துப் பேசவது குறைந்த பட்சம் 'நாகரீகக் குறைவானது' என்ற எண்ணம் பரவலாக சமூகத்தில் ஊடுருவியுள்ளது. சாதி குறித்துப் பேசிப் பெருமைப்பட்ட சமூகத்தில், சாதி என்ற பெயரால் ஒடுக்கு முறையினைப் புரிந்த ஒரு சமூகத்தில் சாதி குறித்துப் பேசவது அவமானத்துக்குரியது என்ற சிந்தனைப் போக்கு மேலெழுந்து வந்தமைக்கு இம் மாவீரர்களின் தியாகம் ஒரு அடிப்படைக் காரணமாகும்.

நூற்றாண்டுகளாக நிலவிவந்த சாதியமைப்பு மிகக் குறுகிய காலத்தில் தன்னை அழித்துக் கொள்ளாது படிப்படியாக சிந்தனைப் போக்கிலும் பொருளாதார உறவுகளிலும் ஏற்படும் மாற்றமே சாதி அரக்கனை எமது சமூகத்திலிருந்து துரத்தி அடிக்கும். இத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும் பணியினை தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்றுவரை செய்து வருகின்றன. நாட்டு முன்னேற்றமும் இதனை முடிகின்றது.

எமது சமூகத்தில் ஆணாதிக்க ஒடுக்குமுறைக்குட்பட்டிருந்த பெண்கள் இன்று புத்துணர்வுடன் வெளிப்படுவதினை அவதானிக்கும்போது, தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏற்படுத்திவரும் ஆரோக்கியமான மாற்றம் துல்லியமாகத் தெரியவருகின்றது. காலத்திலே ஆண்களுக்கு நிகராக பெண் போராளிகள் புரிந்து வரும் சாதனைகள், அமைப்பு ரீதியில் ஒருங்கிணைந்து பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகச் செயற்பட்டு வருதல் போன்றவை சமூகத்தில் பெண்களுக்கு தம்மீது ஒரு நம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது. தம்மால் ஏதும் செய்யமுடியாது என்ற மனப்பாங்கிலிருந்து விடுபட்டு தம்மாலும் சாதனைகள் புரிய முடியும் என்ற புதிய உத்வேகத்தினை அளித்துள்ளது. ஆண்கள் மத்தியிலும் பெண்கள் தொடர்பான குறைந்திருந்த நிலையினை இன்று விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தியுள்ளது. இச்சமூகவிலை வளர்ச்சி எம் சமூகத்தில் ஓர் ஆரோக்கியமான சமூகக் கோட்பாடு தோற்றம் பெறுவதற்கு இடமாகச் செல்லும்.

ஊழல், பொதுச் சொத்தினை விரயமாக்குதல், காண்டல் போன்ற சமூக விரோதச் செயற்பாடுகள் தொடர்பான சமூகத்தின் சிந்தனைப் போக்கு முன்னையதனைவிடக் கடுமையாகிவருபதனையும் காணமுடிகின்றது. மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளைப் புரிபவர்களுக்கு எதிராக முன்பு வெளியாகும் கண்டனங்களை விட இன்று வெளியாகும் கண்டனங்கள் மிக மிகக் காத்திரமானது. இது ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கான ஒரு நல்ல அறிகுறியாகும்.

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

மாவீரரின் கொடி...

தேசியக்கொடி பொதுவாக மாலை 6.00 மணிக்கு முன்னர் முறைப்படி இறக்கப்பட வேண்டும். கொடிபேற்றித் தொடக்கப்படும் நிகழ்ச்சிகள் மாலை 6.00 மணிக்குப் பின்னரும் தொடருமாயின் நிகழ்ச்சி முடிவுற்றதும் கொடியை முறைப்படி இறக்கலாம்.

கொடிபேற்றித் தொடங்கப்படும் நிகழ்ச்சி நாட்கணக்கில் தொடருமாயின் அந்த நிகழ்ச்சிகள் முடிவுறும்வரை தேசியக்கொடி இரவும் தொடர்ச்சியாகப் பறக்க விடப்படலாம். நிகழ்ச்சிகள் முடிவடைந்தபின் முறைப்படி தேசியக்கொடியை இறக்க வேண்டும். ■

எங்கள் தேசியக் கொடியிது

(திரு புதுவை இரத்தினதுரை)

ஏறுதுபார் கொடி ஏறுதுபார்
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - இங்கு
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் - தமிழ்
சமத்தின் வேதனை தீர்த்தகொடி
எட்டுத்திக்கிலும் மானத்தைச் சேர்த்தகொடி
காலத்தை வென்றுமே நின்றகொடி - புலி
காட்டிய பாதையில் சென்றகொடி (ஏறுதுபார்)

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சிறீடும் கொடியிது - தமிழ்
மக்களைக்காத்த நம்மான மாவீரை
வாழ்த்திடும் கொடியிது - புலி
வீரத்தின் கொடியிது
மாவீரனின் கொடியிது (ஏறுதுபார்)

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது - பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது - தமிழ்
சமத்தின் கொடியிது - புலி
ஏற்றிய கொடியிது (ஏறுதுபார்)

சாதிகள் சண்டைகள் சாய்த்து விழுத்திய
சாதனைக் கொடியிது - சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனைமனவிலும்
உலவிய கொடியிது - சம
தர்மத்தின் கொடியிது - எங்கள்
தாயவள் கொடியிது (ஏறுதுபார்)

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது - பிர
பாகரன் என்றிடும் காவியநாயகன்
போற்றிடும் கொடியிது - தமிழ்த்
தேசத்தின் கொடியிது - எங்கள்
தேசிய கொடியிது (ஏறுதுபார்)

மாவீரர்...

...டிகள் ஆகியவை வழங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கடரேற்றும் வைபவம்

நவம்பர் 19ம் திகதி இரவு 11 மணி ஒரு செக்கனுக்கு சகல ஆலயங்களிலும் மணிகள் ஒலிக்கப்பட்டன. இதேநேரம் சகல தமிழீழ மக்களும் எழுந்து நின்று விளக்கைக் கொழுத்தினர். இதைத்தொடர்ந்து மாவீரர் துயிலும் இல்லத்தில் நடுவில் பெரிய தீபம் 12.00 மணிக்கு ஏற்றப்பட்டது. அதைத்தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் கல்லறைகளுக்கு தீபங்களை ஏற்றினர். மாகாட்ட அரசியல்துறைச் செயலகங்கள் உட்பட தமிழீழம் எங்கும் ஒளிக்கூடர்கள் ஏற்றிவைக்கப்பட்டு எங்கும் ஒளிமயமாக காட்சியளித்தது.

பொதுக்கூட்டம்

இந்நிகழ்வைத் தொடர்ந்து மாவீரர் வார இறுதிநாளும் தமிழீழத் தேசிய நாளுமான இன்று மாலை கோட்ட ரீதியாக பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன. இறுதியாக அனைவரும் ஒன்றுகூடி [illegible] வைத்துடன் நடைபெறுகின்ற இக்கூட்டங்களிலும் மாவீரர்களின் பெற்றோர்கள் சிறப்பான முறையில் கலந்துகொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பொதுக் கூட்டங்களையடுத்து தமிழீழத் தேசியக் கொடி இறக்கம் வைபவத்துடன் 1992 ஆம் ஆண்டு மாவீரர்கள் நினைவு நிறைவு பெறுகின்றது. ■

சுவிட்ஸ் உதவி

சுவிட்ஸ் சிட்ரா நிறுவனத்தின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் உயிரியல் வாயு உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதனின் புனர்வாழ்வு நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வரும் உரும்பிராய் ஞானசம்பந்தர் சிறுவர் இல்லத்துக்காக இந்த நிலையத்தை அமைக்க சுவிட்ஸ் நிறுவனம் இரண்டு லட்சத்து 53 ஆயிரம் ரூபாவை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக 10 உயர்தர பக்கங்களை வாங்கிப் பால் நிலையம் அமைக்க சுவிட்ஸ் சிட்ராநிறுவனம் நிதி வழங்கியுள்ளது.

தமிழ் ஆவணங்கள் Tamileelam Archive

அராலித்துறைச் சாதனைக்குப் பின்னால்...

கடந்த ஆவணி மாதம் 8ம் திகதி அராலித்துறையில் இடம் பெற்ற ஒரு கண்ணிவெடித்தாக்குதலில் சிக்கி, வடபிராந்தியப் படைத்துறைத் தலைமைத் தளபதிகளான மேஜர் ஜெனரல் கொப்பேக்கடுவ உட்பட ஒன்பது உயர் அதிகாரிகளும் ஒரு இராணுவச் சிப்பாயும் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இக்கண்ணிவெடித் தாக்குதலுக்கு உடனடியாகவே நாம் உரிமை கோரியிருந்தோம். ஆனால், அதற்குப்படாதிருந்த 'பழைய கண்ணிவெடி' ஒன்றில் சிக்கியே தமது தளபதிகள் உயிரிழந்தனர் என, சிறிலங்கா அரசு கூறியது. அதாவது, தீவகம் சிங்களப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட முன்னர் புலிகளினால் அது

வீரவேங்கை புனிதன் (நமசிவாயம் சிறிதரன்) புங்குடுதீவு

புதைக்கப்பட்டிருந்தது என்றே, சிங்களப் படைகள் விளக்கமளிக்கின்றன.

ஆனால், சிங்கள அரசு கூறுவதுபோல அது பழைய கண்ணிவெடி அல்ல.

வீரவேங்கை எல்லாளன் - நிசாந்தன் பொன்னுத்துரை தங்கத்துரை) வேலணை மேற்கு

தீவகத்திலிருந்து யாழ்ப்பாணம் மீதான படையெடுப்புக்குரிய முன்னேற்பாடுகளைச் சிங்கள இராணுவம் செய்யத்தொடங்கிய அண்மைக்காலத்திலேயே, இக்கண்ணியைப் புதைத்தோம்.

தீவகத்தைச்சுற்றி சிங்களப் படை அமைத்து வைத்திருந்த பாதுகாப்பு வியூகங்களை ஊடுருவி உள்நுழைந்த எமது சிறப்பு வேவுப்பிரிவினர், இந்த வீரசாதனையைப் புரிந்தனர்.

இந்த உண்மையைச் சிங்களப் படைகளும் சிங்கள அரசும் நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தும், அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ளத் தயக்கம் காட்டுகின்றன.

தமது பாதுகாப்பு அரண்களை ஊடுருவி, இந்த இராணுவ சாதனையைப் புலிகள் செய்துள்ளார்கள் என்று வெளிப்படையாகக் கூற, வெட்கப்படுகின்றார்கள்.

ஆனாலும் இக்கண்ணியானது ஒரே தடவையில் அல்லது ஒரே நாளில் கலப்பாக புதைக்கப்பட்டதல்ல. பல இடர்கள் உயிரழப்புக்கள் மத்தியில், பல நாட்கள், பல வேவு வீரர்களினால் பல இடங்கள் பரிசோதிக்கப்பட்டபின், பொருத்தமான ஓர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு இக்கண்ணி புதைக்கப்பட்டது.

இக்கண்ணி புதைக்கப்படவைத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம், வெறும் வெளியுமல்ல; தினமும் படையினர் பயணம் செய்யும் பாதையுமல்ல.

வீரவேங்கை ஆதவன் (சிவராஜா புவனேந்திரன்) வேலணை

ஏனெனில், இது சாதாரண சிப்பாய்களுக்காக வைக்கப்பட்ட கண்ணியல்ல.

2-வது லெப். செம்மியன், கபான் (பிரான்சின் றொமின்சன்) புங்குடுதீவு

படையெடுப்பை முன்னின்று வழிநடாத்த இருக்கும் முக்கிய உயர் அதிகாரிகளை இலக்காகக் கொண்டு, வைக்கப்பட்ட கண்ணியாகும்.

இவ்விதம் ஒரு பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்து கண்ணியைப் புதைக்கமுன்னர், இதற்கான பணியில் ஈடுபட்ட ஐந்து போராளிகளை நாம் இழந்துள்ளோம். இவர்கள் வெவ்வேறு சம்பவங்களில், வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு நாட்களில் வீரச்சாவை அணைத்தனர்.

எல்லாளன், புனிதன் ஆகிய போராளிகள் 22-4-92 அன்று வேலணையிலும், தமிழன் என்ற போராளி 29-05-92 அன்று அராலி வெளியிலும், 2-வது லெப் செம்மியன், 2-வது லெப் அறிவழகன் ஆகிய போராளிகள் 15-06-92 அன்று ஊர்காவற்றுறையிலும் வீரச்சாவடைந்தனர்.

துணிகரமான இந்த இரகசியப் பணியின்போது எதிரியின் கண்ணிகளில் பட்டு துப்பாக்கிச் குண்டேந்தியும், சயனைட் அருந்தியும் எதிரியின் வலயத்துக்குள்ளேயே இவர்கள் வீரச்சாவடைந்தனர். இவர்களது உடல்கள்கூட எதிரியிடமே சிக்கின.

இத்துணிகர வீரசாதனையைப் புரிந்த சிறப்பு வேவுப்பிரிவின் போராளிகளுக்கு, தலைவர் பிரபாகரன் அவர்கள் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்ததுடன் எமது மக்களுக்கு அவர்களின் பெயர் விபரங்களைத் தெரியப் படுத்தினார்.

இவ்விதம் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய இடம்பெற்றுவிட்ட அராலித்

2-வது லெப். அறிவழகன் (றொசாப் வின்சன்ட்) இலந்தமோட்டை, மன்னார்

துறைக் கண்ணிவெடியின் பின்னால் உயர்ந்த தியாகமும், மிகப் பெரிய வீரமும், துணிவும் அடங்கியுள்ளன. ■

கண்ணீர் விட்டே

இளங்கோ சந்தேகப்பட்ட மாதிரி அது இராணுவத்தினர் தான். ஏற்கனவே பிரச்சினை வந்தால் எந்தப் பாதையால் ஓடவேண்டும் என்று கஜேந்திரனுக்கு கூறியிருந்தார். அல்லதுவே ஓடினான் கஜேந்திரன். களைத்துப் போன நிலையில் சயனைட்டைக் கடித்தான். (முழுமையாக விழுங்கவில்லை) அந்நிலையிலும் தப்பமுடியும் போல இருந்தது. முகாமுக்கு ஓடிவந்து விட்டான். முதலுதவியின்பின் காப்பாற்றப்பட்டு விட்டான்.

இளங்கோ காயமடைந்த நிலையில் உயிருக்கு ஊசலாடிக்கொண்டிருக்கிறான் என்பதை அறிந்த ஆற்றுக்குள் வீசினார் (வெருகல் ஆறு முதலைகள் நிறைந்தது). சட்டைப்பையில் இருந்த பணத்தை இராணுவத்தினர் பயன்படுத்த முடியாதவாறு கிழித்தெறிந்தார். (இளங்கோ கிழித்தெறிந்த நோட்டுக்கள் சில இன்னும் முதூரில் உள்ளன). சயனைட்டை கட்டிக்கொண்டார்.

சயனைற் கட்டிக்கொண்ட நிலையில் இளங்கோ என்ன நினைத்திருப்பாரோ?

அப்போது 19 வயதே உள்ள தன்மனைவியையா? தனது மூன்று குழந்தைகளையும் எதிர்காலத்தையா? முதன் முதல் மட்டக்களப்புக்கு வரையில் வரும்போது அதை ஏந்திப் போரிடும் சந்தர்ப்பம் கிடைக்காமல் சாகிறேன் என்றா?

மூன்றாவதுதான் சரியென நான் திடமாக நினைக்கிறேன். இளங்கோவைப் பற்றிச் சரியாக அறிந்தவன் என்றவகையில். இளங்கோவைப் பற்றி நினைக்கும்போது விபரிக்கமுடியாத ஏதோவொரு உணர்ச்சி ஏற்படுகிறது. 'கொஞ்ச நாளைக்கு அவரைத் தூர இடம் ஒன்றுக்கும் அனுப்பமுடியுமோ' என்று சொன்னதைக் 'கேட்டீங்களோ' என்று வெகுதி வருத்துச் சொல்வது போன்ற ஒரு உணர்வு ஏற்படும்.

. . . . .

இளங்கோவின் மரணம் பற்றிய செய்தி யாழ்ப்பாணத்திலிருந்து தான் மட்டக்களப்புக்குக் கிடைத்தது. அப்படியானால் காந்தன் எங்கே? ஏன் வரமால் நிற்கிறான்? துடித்துக் கொண்டிருந்தேன் நான். சில நாட்களின் பின் காந்தன் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டான். சம்பவம் நடந்த உடனே என்னிடம் வராததற்காக அவனைக் கோபித்துக் கொண்டேன். 'எப்படிக் காக்கா வரமுடியும்? கடுமணலுக்க நடந்து காலெல்லாம் ஒரே கொப்புளம்!' என்றான் அவன். பின்னர் காந்தனிடம் போன போதுதான் இருகால்களையும் கவனித்தேன். கதத்திரத்துக்காக நாங்கள் கொடுக்கும் விலைதான் அந்தக் கொப்புளங்கள் என்று.

. . . . .

இளங்கோவை இழந்ததற்காக பதிலடி கொடுக்க வேண்டுமென்றான் காந்தன். இளங்கோவை நாம் இழப்பதற்கு காரணமானவர்களை முகாம் இராணுவத்தினர் மீதே எமது முதல் தாக்குதல் (17-08-91 அன்று) நடைபெற்றது. எமக்கு ஒரு T 56 ரக றைபிள் கிடைத்தது. மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பின்னாளில் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்த குமரப்பா இத்தாக்குதலுக்கு தலைமை தாங்கினார். ஏதோ ஒரு திருப்திமைக்கு

. . . . .

வளர்ந்து கொண்டே போனது எங்கள் தேசிய விடுதலைப் போராட்டம். மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரி நிமால் டி சில்வா கட்டை ஏராளமான படையினரை இழந்து சிறிலங்காப் படை அவ்வாறே இந்தியப் படையும் மட்டக்களப்பில் கசப்பான பாடங்களைப் படித்தது.

தமிழ்த் தேசிய இராணுவத்தின் மீதான தாக்குதலின் முடிவில் கைப்பற்றப்பட்ட 50க்கு மேற்பட்ட கால்காவட்ரோ, 200க்கு மேற்பட்ட LMG, 2000க்கு மேற்பட்ட றைபிள்கள், ஏராளமான மோட்டார்கள் போன்ற ஆயுதங்களை ஏற்றுவதற்கு உழவு இயந்திரங்களும், பாரவண்டிகளும் (லொறி) தான் தேவைப்பட்டன என்ற செய்தியை அறிந்தபோது பரமதேவாவையும், ரவிவையும் இழந்து ஒரேயொரு றைபிளை மட்டும் பெற்றுக்கொண்டது நினைவுக்கு வந்தது.

தொடர்ந்து சிறிலங்காப் படையினருடனான போர் தொடங்கிய போது (1990 ஜூன்) வாழைச்சேனை முதல் பொத்துவில் வரையிலான சகல காவல் நிலையங்களும் ஒரே இரவில் கைப்பற்றப்பட்ட செய்தி கிடைத்தது. அப்போது நாம் தென்மேற்கு மாவட்டங்களை முதலாவது காவல்நிலையத் தாக்குதல் தான் நினைவுக்கு வந்தது. ஒரு காவல் நிலையத்தைக் கைப்பற்றவே ஆயுதங்களும் போராளிகளும் போதாமலிருந்த நாம் இன்று ஆயுதங்களின் தொகையில், ஆட்பலத்தில் பலமடங்காக பெருகி நிற்பதை எண்ணி மகிழ்கிறேன்.

எமது போராட்டத்தின் வளர்ச்சி சிறிலங்காப் படையினர் மூலமாகவும் தெரிகிறது. அன்று (13-10-86) அடம்பனில் எம்மால் கைது செய்யப்பட்டு கைதிகள் பரிமாற்றத்தின் மூலம் சிறிலங்காவிடம் ஒப்படைக்கப்பட்ட (19-12-86) பாணந்துறையைச் சேர்ந்த அழுத் சந்திரசிறி இன்று (2-08-91) வட முனையில் எமது தாக்குதலின் போது உயிரிழந்துள்ளான். (இத்தாக்குதலில் மொத்தம் 24 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 20 றைபிள்கள் கைப்பற்றப்பட்டன.) இவனை மேஜராக கௌரவித்துள்ளது சிறிலங்கா அரசு. இதற்காக்குவில் எமது தரப்பில் எந்தவிதமான இழப்பும் இருக்கவில்லை. இது எமது வளர்ச்சியின் இன்னொரு எடுத்துக் காட்டு.

1990ம் ஆண்டு கொக்குத்தொடுவாயில் குமரப்பா புலிகளிடம் முதலாக பண்ணிய கோக்கான அம்பலம் கட்டப் நடைபெற்று அதில் நானும் வந்து கொண்டேன். அன்று சிறுவர்களாக இருந்த பலர் அங்கு றைபிள்களைக் கட்டிக் கொண்டு போராளிகளாக நின்றனர். அந்தக் கட்டத்தில் திருட்டுமணி பேசினார், 'தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நாம் கைப்பற்றிய ஆயுதங்களில் பெரும்பாலானவை மட்டக்களப்பு அம்பாறைப் பிரதேசத்திலிருந்தே பெறப்பட்டன. இன்று யாழ்ப்பாணம் கோட்டை எம்மால் விடுவிக்கப்பட்டிருக்கின்றதென்றால் மட்டக்களப்புப் போராளிகளும்தான் அதில் பங்காளிகள். மட்டக்களப்புப் போராளிகளும் அங்கு வீரச்சாவு அடைந்துள்ளார்கள். அதைவிட, யாழ்ப்பாணக் கோட்டையை விடுவிப்பதற்கு பயன்படுத்திய ஆயுதங்களில் கணிசமானவை எம்மால் கைப்பற்றப்பட்டவையே.'

நான் அந்த இரு கைத்துப்பாக்கிகளையும் நினைத்துக் கொண்டேன். கூடவே இளங்கோவின் குழந்தைகளையும் காந்தனின் கொப்பளித்த பாதங்களையும். ■

தமிழீழ மாவீர் கலைக்கோட்டம்

தமிழீழ மாவீரர் கலைக் கோட்டம் ஒன்று தமிழீழத்தில் அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இதன் மாதிரியுருவை அருகிலுள்ள படம் சித்தரிக்கின்றது. அத்துடன் தமிழீழத்தில் மாவீரர்களின் திருவுருவங்கள் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டு, உயிர்த்துடிப்புடன் காட்சியளிக்கின்றன. கீழே இச்சிற்பங்களில் சில காட்சிக்கு தரப்படுகின்றது.

அம்மாவும் அப்பாவும் எங்களுக்குண்டு
ஆனாலும் மண்மீது பெரும் பாசம் உண்டு
ஆறாத மண்கூட எமக்காகக் கேளோம்
தமிழ்த்தாயின் துயர் தீர்க்க
மகிழ்வோடு சாவோம்

சாவினைத் தோள்மீது நாங்கள் சுமப்போம்
சாவுக்கும் அஞ்சாமல்
சாவுக்குள் வாழ்வோம்
தமிழரின் சாவுகள் வரலாறு படைக்கும்
தமிழீழத் தாயவள் விலங்குகள் உடைக்கும்

எங்களின் சாவு ஒரு வரலாறு
எழுதிய வெற்றிகள் பல நூறு
இங்கு இது போல் வீரம் வேறில்லை உயிர்
சதையே அணைத்துக்கும் மேலெல்லை



சிறப்பாய்



மாவீரர்கள்

வாயள்ளித் தின்றதும்
தமிழே--எங்கள்
வாசலில் வந்ததும்
தமிழே
நோயள்ளும் போதி
லும் தமிழே--நாங்கள்
நீறாகி எரிகின்ற
போதிலும் தமிழே

கடைசித் தமிழன்
உள்ள வரைக்கும்
களத்தில் நின்று
போராடு
தமிழனின் குருதியில்
வடித்த ஈழமென்று
உலகு சரித்திரம்
சொல்லும்.



கம்பீரன் தமிழும்
நாவை பிறக்கும்
காடுகள் அடிமை
விலங்கு தெறிக்கும்(2)

கண்டும் பழைய சிறகு விரிக்கும்
குனிந்த முகங்கள்
நிமிர்ந்து சிரிக்கும் (2)
மாண்ட வீரர் கனவு பலிக்கும்
மகிழ்ச்சிக் கடலில்
தமிழ் மண் குளிக்கும் (2)

வானம் நமது
கொடியை அழைக்கும்
மாற்றார் முகத்தில்
நாணம் முளைக்கும் (2)
மானம் தமக்கோர்
மாடம் வழங்கும்
மண்ணில் நமது
பெயரும் விளங்கும் (2)

தமிழ் அகதிகளுக்காக்கம் Tamileelam Archive



உணர்வு இழந்த வேளையில்

பிரிந்து நொந்து வேர்கள்

உரிமை உரங்கும் வேளையில்
விழிந்துக் கொண்ட வேங்கைகள்
உணர்விழந்த வேளையில்
உயிரைத் தந்த வேங்கைகள்

(உரிமை உரங்கும்...)

உங்கள் பாதச் சுவட்டிலே
எங்கள் பயணம் தொடரும்
சுதந்திரம் வெல்வோம்
தலைவனின் வழியில்

(உரிமை உரங்கும்...)

கல்லறையில் புதைத்தோம்
உருப் பெறுவீர் மீண்டும்
கனவின் செந்தீரா
பன்னீராக்குவீர்

(உரிமை உரங்கும்...)

உணர்வு உரங்கிய பாங்கை
செந்தனலில் வீசிச் சென்றீர்
உரங்கிய தமிழினத்தை
உணர்ந்து பார்க்க சொன்னீர்

(உரிமை உரங்கும்...)

தமிழ் இலக்கியம்
Tamileelam Archive

TAMIL CO-ORDINATING COMMITTEE
P.O.BOX 694, MULGRAVE NORTH
VICTORIA 3170, AUSTRALIA
Tel: 03-457 5347 Fax: 03-561 5224

LIBERATION TIGERS OF TAMIL EELAM
P.O.BOX 47, 7600 STRUER
DENMARK
Tel. / Fax: 97-841231

TAMIL CO-ORDINATING COMMITTEE
341 Rue des Pyrenees
75020 paris, france
Tel. 435 81142 Fax: 435 81191

TAMIL CONFEDERATION GERMANY
P.O.BOX 340251
5270 GUMMERSBACH 34
GERMANY

TAMIL CO-ORDINATING COMMITTEE
Via Marsala Stazio, 34
90139 PALERMO, ITALY
Tel. / Fax: 091-611 3179

TAMIL CO-ORDINATING COMMITTEE
Groot Hertogpinelaan 106
2517 BL Den Haag, NEDERLAND
Tel:070-346 1963 Fax:070-346 1970

TAMIL CO-ORDINATING COMMITTEE
P.O.Box 1899 Vika
0110 OSLO - 1 NORWAY
Tel: 02-191260 Fax: 02-190114

TAMIL CO-ORDINATING COMMITTEE
HOFREGLIN, 7416 ROGELS
SWITZERLAND
Tel: 077 [illegible]

UNITED TAMILS ORGANISATION
54 TAVISTOCK PLACE
LONDON WC1H 9RG, U.K.
Tel: 071-837 7860 Fax: 071-278 1666